Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-21 03-04-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 44


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M. சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247

## எல்லைப்படை மாவீரர் குடும்பங்களுக்கு தேசியத்தலைவரின் சிறப்புப் பரிசில்கள்

### கிளிநொச்சியில் நேற்று கௌரவிப்பு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

எல்லைப்படை மாவீரர் குடும்பங்கள் நேற்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட சிறப்புப் பரிசில்கள் வழங்கிக் கௌர விக்கப்பட்டனர்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் எல்லைப் படை மாவீரர்களின் குழந்தைகளை கௌரவிக் கும் நிகழ்வும், தமிழவளின் "எல்லைகாக்கும் இல் லங்கள் பாகம்-1" நூல் வெளியீடும் இடம்பெற்றது.

இதன் போதே இந்தச் சிறப்புப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

காலை 11.00 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் முதல் நிகழ்வாக எல்லைப்படை மாவீரர்களின் குழந்தைகள் கௌரவிக் (12ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரின் உடல்நலக்குறைவு குறித்து தேசியத்தலைவரின் சார்பில் கவலை தெரிவிப்பு

### இத்தாலியில் அரசியல் துறைப்பொறுப்பாளர் தெரிவித்தார்

(ரோம்)

பாப்பரசர் இரண்டாம் ஜோன்போல் கடும் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து தமிழீழத் தேசியத் தலைவர் சார்பிலும் தமிழ் மக்கள் சார்பிலும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார்.

இத்தாலியில் நேற்று முன்தினம் அந்நாட்டு வெளியுறவு அமைச்சு அதிகாரிகளை தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் சந்தித்து பேசினர்.


இச்சந்திப்பின் போதே இத்தாலிய அரசுப்பிரதிநிதிகளிடம் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் தமது ஆழ்ந்த கவலையை தெரிவித்தார்.

# இரு அமெ. சனநாயகக் கட்சிப் பிரதிநிதிகள் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளுடன் சந்திப்பு

## முல்லைத்தீவையும் பார்வையிட்டனர்

(கிளிநொச்சி)

அமெரிக்க சனநாயகக் கட்சிப் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். பின்னர் இவர்கள் முல்லைத்தீவுக்குச் சென்று பார்வையிட்டதுடன் அங்கு கலந்துரையாடல்களையும் நடத் தினர். (12ஆம் பக்கம் பார்க்க)



## படையினரின் உந்துருளி மோதி மாணவி காயம்: மக்கள் ஆவேசம்

### -சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் சிறிலங்கா படையினரின் உந்துருளி பாடசாலை மாணவி மீது மோதியதில் மாணவி படுகாயமடைந்துள்ளார். நேற்று மாலை 4.30 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் விஜயகுமார் சுஜிதா என்ற மாணவியே படுகாயமடைந்துள்ளார்.

இதனால் படையினருக்கும் மக்களுக்கும் இடையில் அப்பகுதியில் கடுமையான முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதான வீதியில் மருத்துவமனைக்கும் சங்கத் (12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர்களின் தியாகங்களை ஆவணமாகப் பேணுவதில் தேசியத் தலைவர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்

### மாவீரர் பணிமனை நடுவப் பணியகத் திறப்பு விழாவில் சோ. தங்கன்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் விடுதலைப் போரில் வித்தாகிய மாவீரர்களின் தியாகங் களையும், வரலாறுகளையும் ஆவணமாகவும், சான்றுகளாகவும் பேணவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறைகொண்டு செயற்பாடு களை முன்னெடுத்து வருகின்றார் என தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங் கன் அவர்கள் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று தமிழீழ மாவீரர் நடுவப் பணிமனையினை (12ஆம் பக்கம் பார்க்க)



## பிந்திய செய்தி!

## பாப்பரசர் காலமானார்!

### நள்ளிரவுக்குப்பின் வத்திக்கான் அறிவிப்பு

## சுனாமி மீளமைப்பில் இணைந்து செயற்படுவது குறித்து சிறில. அரசு முடிவெடுக்காதது வருத்தமளிக்கின்றது

### இத்தாலிய வெளியுறவு அதிகாரிகளுடனான சந்திப்பில் சு.ப. தமிழ்ச்செல்வன்

(ரோம்)

சுனாமி மீளமைப்புப் பணிகளை முழுமை யடையச் செய்ய பொதுக்கட்டமைப்பு ஒன்றின் கீழ் இணைந்து பணியாற்ற சிறிலங்கா அரசுக்கு வேண்டுகோள் விடுத்தும் அரசு இதுவரையில் இப்பொதுக் கட்டமைப்புக் குறித்து எவ்வித முடிவும் மேற்கொள்ளாதது வருத்தமளிக்கின்றது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித் துள்ளார். ஐரோப்பிய நாடுகளில் பயணம் (12ஆம் பக்கம் பார்க்க)



# கி.அபிவிருத்தி வங்கியினால் பெப்ரவரி மாதம் 149 பயனாளிகளுக்கு 52 இலட்.ரூபா கடன்

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் 51 இலட்சத்து 74 ஆயிரத்து 125 ரூபாவை 149 பயனாளிகளிற்கு கடனாக வழங்கியுள்ளது.

கிராமிய அபிவிருத்தி வங்கி விவசாயக் கடனாக 35 பயனாளிகளிற்கு 378500 ரூபாவும், சுயதொழில் கடனாக 72 பயனாளிகளிற்கு 20 இலட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபாவும், தொழில்துறை மேம்பாட்டுக் கடனாக 18 பயனாளிகளிற்கு 16 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், ஏனைய கடனாக 11 இலட்சத்து 20 ஆயிரத்து 125 ரூபாவும் 24 பயனாளிகளிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தளிர் கணக்கினை பேணும் சிறார்களிற்கு பரிசில்களையும், 5 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகை சேமிப்பில் வைத்திருந்த பயனாளிகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன. (15)

# விற்பனை முகவராண்மை வழங்கவில்லை புதுக்குடியிருப்பில் பெற்றோல் தட்டுப்பாடு

(புதுக்குடியிருப்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் பெற்றோல் விற்பனைக்கான முகவராண்மை புதுக்குடியிருப்பில் வழங்கப்படாமையால் புதுக்குடியிருப்புப் பிரதேச மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வாகன உரிமையாளரும் அதனை அண்டிய பகுதி வீடுகளில் உள்ள வாகன உரிமையாளரும் கூடுதலான விலை கொடுத்து பெற்றோலை பெறவேண்டிய நிலையில் உள்ளனர்.

வெளிமாவட்ட வாகனங்கள் வருவதும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றமையால் தேவைகளும் அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# சுகாதார நலன் குறித்து மன்னாரில் கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மாவட்ட சுகாதார பணிமனையில் சுகாதார நலன் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் மு. கதிர்காம நாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில் தமிழீழ சுகாதார சேவைப்பணிப்பாளர் விக்ரமன், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன், மன்னாரிலுள்ள சகல சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ தாதிமார், தனியார் மருத்துவர்கள், சுதேச வைத்தியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் மன்னாரில் உள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்குவது, தனியார் சுகாதாரப்பழக்கத்தைப் பேணுதல், பாடசாலை மட்டத்தில் சுகாதார நடைமுறைகளை அறிமுகப்படுத்தல் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

(18)

# முள்ளியவளை பொது அமைப்புக்கள் அரசின் நடவடிக்கைகளுக்குக் கண்டனம்

(முல்லைத்தீவு)

சிறிலங்கா அரசினதும் படையினரதும் போர்நிறுத்த மீறல்களை முள்ளியவளைப் பொது அமைப்புக்கள் கண்டித்துள்ளன. முள்ளியவளை பிரதேச பொது அமைப்புகளுக்கிடையிலான சந்திப்பு நேற்று காலை 10.00 மணிக்கு முல்லைப்பிரதேச அரசியல்துறைச் செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் முல்லைவீரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதில் கருத்துரட்டலை முள்ளியவளை காவல் பணிமனைப் பொறுப்பாளர், முல்லை.மாவட்ட அரசியல் துறைப் வெளியக மக்கள் தொடர்பாளர் ஈழவன், முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினார்கள். இக்கலந்துரையாடலில் கிராம அலுவலர்கள் ஆசிரியர்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். முக்கியமாக சிறிலங்கா அரசாங்கத்தினாலும் அதன்படைகளினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் போர் நிறுத்த மீறல்களுக்கு இச்சந்திப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (20)

# ஓடி வந்த உழவு இயந்திரத்தின் சில்லு கழன்றோடி பாதசாரியைத் தாக்கியது

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் நேற்று இடம் பெற்ற இரண்டு வீதிவிபத்துக்களில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இதில் ஒருவர் படுகாயம் அடைந்து புதுக்குடியிருப்பு. வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒட்டுசுட்டான் வீதிவழியாக புதுக்குடியிருப்பு நோக்கி வந்துகொண்டிருந்த உழவு இயந்திரப்பெட்டியின் சில்லு புதுக்குடியிருப்புச் சந்தியில் கழன்று ஓடி வீதியால் வந்த கைவேலியைச் சேர்ந்த 55 வயதுடைய தம்பையா சிவராசா என்பவரைத் தாக்கியது. இதனால் படுகாயமடைந்த அவர் உடன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை புதுக்குடியிருப்புச் சந்தியில் இரண்டு உந்துருளிகள் மோதிக்கொண்டதில் ஒருவர் காயம் அடைந்துள்ளார். (08)

# -முல்லைத்தீவு மாவட்ட- அன்னையர் முன்னணியின் மாதாந்தக் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லை.மாவட்ட அன்னையர் முன்னணியின் மாதாந்த கலந்துரையாடல் முல்லை.மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் முல்லை. மாவட்ட அன்னையர் முன்னணியின் உப தலைவி தி.பராசக்தி தலைமையில் கடந்த 31 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் அன்னையர் முன்னணியின் எதிர்கால செயற்பாடுகள் குறித்த கருத்தினை முல்லை. மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி வழங்கினார். தொடர்ந்து கருத்துரைகளை தமிழீழ மகளிர் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் வசந்தி, அன்னையர் முன்னணி ஆலோசகர்களான திருமதி க.பத்மாவதி, திருமதி ந.சரஸ்வதிதேவி, பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் மதனி வன்னி, பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் வழங்கினார்கள். தொடர்ந்து சமகால அரசியல் நிலைப்பாடுகள் மற்றும் அன்னையர் முன்னணியின் செயற்பாடுகள் தொடர்பாக முல்லை.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் கருத்துரை வழங்கினர். இதில் பெண் போராளிகள் அன்னையர் முன்னணியின் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர். (20)

# வட்டக்கச்சியில் வாய்க்கால் நீர் வீதியை மேவிப்பாய்கிறது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதிக்கு சிறுபோக நெற்செய்கைக்காக இரணைமடுக் குளத்தில் இருந்து நீர் திறக்கப்பட்டுள்ளதால் வட்டக்கச்சிப் பகுதியில் வாய்க்காலினுள் நீர் மட்டம் உயர்ந்து வீதிக்குக் குறுக்காக நீர் மேவிப் பாய்கிறது. அதாவது வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி கோஸ்வே மற்றும் அருகில் உள்ள பள்ளமான பிரதேசம் மற்றைய சந்தையடிக் கோஸ்வே ஆகிய இடங்களில் இருந்து வீதிக்குக் குறுக்காக நீர் மேவிப்பாய்ந்து வருகின்றது. (12)

# தற்காலிக கொட்டில்களில் தவிக்கும் உமையாள்புரம், குமரபுரம், பரந்தன் மக்கள்

(விசுவமடு)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊரியான், குமரபுரம் உமையாள்புரம், பரந்தன் ஆகிய நான்கு கிராமங்களில் மீள்குடியேறிய மக்களுக்கு அரசாங்கமோ அரச சார்பற்ற நிறுவனங்களோ மக்களுக்கான வீடு அமைக்கும் வேலைகளை இது வரைக்கும் மேற்கொள்ளவில்லையென அம்மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன்இப்பகுதியில் மீள் குடியேறிய மக்களுக்கு உலர் உணவு நிவாரணங்கள் நிறுத்தப்பட்டு மக்கள் அனாதரவாக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் செய்வதறியாது வாழ்ந்து வருகின்றனர். கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 16 கிராமங்களைச் சேர்ந்த இந்த மக்கள் அபிவிருத்தி வேலைகளில் புறம் தள்ளப்பட்ட நிலையில் இருப்பதனால் இக் கிராமங்களில் வாழும் மக்கள் பல கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இக் கிராம மக்கள் மீள்குடியமர்ந்த தற்காலிக கொட்டில்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இருந்த போதும் இதுவரை அரசாங்கத்தினாலோஅன்றி அரச சார்பற்ற நிறுவனங்களாலோ எந்த விதமான அபிவிருத்தி நடவடிக்கைகளோ வீடமைப்புத்திட்டங்களோ மேற்கொள்ளாதது குறித்து இப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (46)

# கோழிகள் திருட்டு சந்தேக நபர் கைது

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசம் பாலையடி பகுதியில் அண்மைக் காலமாக கோழிகள் களவு போனது குறித்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருகையில், இவர் நேற்று முன் தினம் இரண்டு கோழிகளை மல்லாவிச் சந்தையில் விற்பனை செய்தவேளை துணுக்காய் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (24)

### நூல் அறிமுகவிழா

பரமுபுத்திரனின் "தூயமனதுடன்" நாடகங்களின் தொகுப்பு நூல் அறிமுகவிழா நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தில் மாலை 3.00 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

# மு/பாலிநகர் மகாவித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா

மு/பாலிநகர் மகாவித்தியாலய புதிய கட்டடம் மற்றும் அரங்கத் திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் 12.30 மணியளவில் பாடசாலையின் அதிபர் து.யேசுதானந்தர் தலைமையில் நடைபெற்றது.

இத்திறப்பு விழா வைபவத்தின் பிரதம அதிதியாக கல்விக்கழக துணைப்பொறுப்பாளரான க.அருண் ஆசிரியர் கலந்து சிறப்பித்தார். இவருடன் வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், திட்ட அதிகாரி மற்றும் போராளிகள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.



முன்னதாக மங்கல விளக்கினை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் குரூஸ், பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், ஓய்வு பெற்ற அதிபர் க.செல்வரட்ணம், சமாதான நீதவான் வே.இராசையா ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை பிரதேசப் பொறுப்பாளர் இலக்கியன் ஏற்றிவைத்தார். படிப்பக பெயர்ப்பலகையை வவுனிக்குளம் நீர்ப் பாசனப் பொறியியலாளர் எஸ்.தவக்குமார் திரை நீக்கம் செய்துவைத்தார். படிப்பகத்தை கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் அருண் ஆசிரியர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அதிபர் அலுவலக பெயர்ப்பலகையை பிரதிப்பணிப்பாளர் (திட்டமிடல்) ஞானம் திரை நீக்கம் செய்துவைத்தார். அதிபர் அலுவலகத்தை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜே.குரூஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். வகுப்பறைக் கட்டடம்-I பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினத்தால் திறந்து வைக்கப்பட்டது. வகுப்பறைக் கட்டடம்-II முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தனால் திறந்து வைக்கப்பட்டது. நுழைவாயிலை பழைய மாணவன் செல்வச்சந்திரனும், சமாதான நீதவான் பரமநாதனும் திறந்து வைக்க, பாடசாலையின் பெயர்ப்பலகையை கிராம சேவகர் பாலசிறிதரன் திரை நீக்கம் செய்து வைத்தார். அமரர் மகாலிங்கம் அரங்க பெயர்பலகையை பழைய மாணவன் ம.இளையராஜா திரை நீக்கம் செய்து வைத்தார். (சோ)

# கலந்துரையாடல்

(முள்ளியவளை)

முல்லை மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் (சி.எச்.ஏ) அனிஞ்சியன்குள கிராமத்தில் 22 ஆம் திகதி அகல்யா முன்பள்ளியில் காலை 9.30 மணி யளவில் சமாதானமும் அபிவிருத் தியும் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. (ஆ)

# ஈருருளிகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முல்லை பங்குத்தந்தையின் தலைமையிலான சுனாமியால் பாதிப்புற்ற முல்லை மக்களுக்கான புனர் நிர்மான அமைப்பினால் ஈருருளிகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது என அந்த அமைப்பின் செயலாளர் அழகன் தெரிவித்தார்.

மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களில் உயர்தர மாணவர்கள் 69 பேருக்கு கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் கதிரை, மேசைகள் கடந்த 23ஆம் திகதி முல்லை மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. (20)

# உலக கத்தோலிக்க தலைவர் போப்பின்

# உடல் நிலை தொடர்ந்தும் மோசமான நிலையில்

## தற்காலிக பொறுப்பை காமில்லா ஏற்றார்

(வத்திக்கான்)

**உலக கத்தோலிக்க மதத் தலைவர் போப் ஜோன்போலின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளதால் தற்காலிக பொறுப்பை காமில்லா ஏற்றுள்ளார்.**

போப் இரண்டாம் ஜோன்போல் அண்மைக்காலமாக கடும் உடல் நலக் குறைவால் தவித்து வருவது தெரிந்ததே. கடும் மூச்சுத் திணறல் காரணமாக அவர் றோம் நகரில் உள்ள கெமல்லி மருத்துவ மனையில் 28 நாள் சிகிச்சை பெற்றுத் திரும்பினார். அதன் பிறகும் நிலைமை சீரடையவில்லை.

இந் நிலையில் கடந்த வியாழனன்று போப் இரண்டாம் ஜோன் போலுக்கு மாரடைப்பும் மூச்சுத் திணறலும் ஏற்பட்டது. இதையடுத்து கடந்த வியாழனன்று இந்திய நேரப்படி 10.47 மணியளவில் அவருக்கு நோயில் பூசுதல் (அவஸ்தை பூசுதல்) சடங்கு அளிக்கப்பட்டது. போப் இனிமேல் பிழைத்து வருவார் என்ற நம்பிக்கை குறைந்து விட்டதால் அவரது இடத்தில் கர்தினால் காமில்லா ரூயினி (வயது 84) தற்காலிகமாகப் பொறுப்பேற்றுள்ளார். உலகம் முழுவதும் உள்ள 110 கோடி றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் போப்பிற்காக பிரார்த்தனை செய்யும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

போப் மற்றும் கத்தோலிக்கத் திருச்சபையின் செய்தித் தொடர்பாளரான ஜோக்கின் நவாரோவும் இதைப் போல வேண்டுகோள் விடுத்துள்ளார். இதையடுத்து உலகம் முழுவதும் போப்பிற்காக சிறப்பு திருப்பலிப் பூசைகள் நடந்து வருகின்றன.

போப்பிற்கு கடும் மூச்சுத் திணறல் ஏற்பட்டிருப்பதனால் அவருக்கு செயற்கை முறையில் சுவாசம் அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவரது உடல் நிலை பற்றி மருத்துவர்களால் உறுதியாக எதுவும் சொல்ல முடியவில்லை. இந்த நிலையில் போப் எந்த நேரத்திலும் மரணத்தை தழுவலாம் எனக் கருதப்படுகிறது.

போப் இரண்டாம் ஜோன்போல் கடந்த 26 ஆண்டுகளாக போப் பதவியில் இருந்து வருகிறார்.



போப்பாண்டவர்களில் மிக நீண்ட காலம் இந்தப் பதவியை வகித்தவர்இவர் தான். போப் ஜோன்போல் இதுவரை 130 நாடுகளின் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இதுவரை 7 இலட்சத்து 75 ஆயிரம் மைல் தூரம் பயணம் செய்துள்ளார். கிறிஸ்தவர்களின் புனித பூமியான இஸ்ரேல் நாட்டுக்கு சென்று ஜெருசலம் நகரில் இவர் பிரார்த்தனை நடத்தி இருக்கிறார் ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பை இவர் நேரடியாக கண்டித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



*போப்பாண்டவர் ஜோன்போல் உடல் நிலை மிக மோசமானதைத் தொடர்ந்து அவரது சொந்த நாடான போலாந்தில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் லட்சக் கணக்கில் கூடி நின்று அவருக்காக பிரார்த்தனை நடத்திய காட்சி.*



*பாப்பரசர் ஜோன் போல் கடுமையான வருத்த முற்றிருக்கும் நிலையில் லோஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வு ஒன்றில் அவரது புகைப்படத்தை மண்டியிட்டிருக்கும் ஒருவர்.*



*இந்தோனேஷியாவின் நியாஸ் தீவில் ஏற்பட்ட பூகம்பத்தின் பின்னர் சேதமடைந்த தனது வீட்டின் முன்னால் குளியலில் ஈடுபட்டுள்ள குடும்பம் ஒன்றை படத்தில் காணலாம்.*

# எனக்காக யாரும் அழவேண்டாம் போப்பாண்டவர் அறிவுரை

போப்பாண்டவர் நேற்று முன்தினம் தனது தனி செயலாளர் ஸ்டானிஸ்லா மூலம் ஒரு சிறு குறிப்பை வெளியிட்டார். அதில் அவர் எனக்காக யாரும் அழக்கூடாது. நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். நீங்கள் அனைவரும் நலமாக இருக்க வேண்டும். நாம் அனைவரும் மகிழ்ச்சியுடன் ஒருங்கிணைந்து பிரார்த்தனை செய்யலாம் என்று குறிப்பிட்டுள்ளார். றோம் நகர பத்திரிகை ஒன்று இந்த தகவலை வெளியிட்டள்ளது.

# போப்பாண்டவரை தேர்ந்தெடுப்பது எப்படி?

(வத்திக்கான்)

உலகில் வாழும் 100 கோடிக்கும் மேற்பட்ட கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு வாழும் கடவுளாக திகழ்பவர் போப்பாண்டவர். கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் முக்கிய செயற்பாடுகளை முடிவு செய்து அறிவிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. சிறு வயதில் இருந்தே இறை பணியில் ஈடுபட்டு தன்னலமற்ற சேவை செய்பவர்தான் போப்பாண்டவர் பதவிக்கு வரமுடியும்.

தற்போது போப்பாண்டவராக இருக்கும் இரண்டாம் ஜோன்போல் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். 1920ஆம் ஆண்டு பிறந்த இவர் 1978 ஆம் ஆண்டு போப்பாண்டவராக பதவி ஏற்றார்.

போப்பாண்டவர் பதவிக்கு தேர்ந்தடுக்கப்படுபவர்களின் இயற்பெயர் மாற்றி பாரம்பரிய பெயர் வைக்கப்படும். தற்போதுள்ள போப்பாண்டவரின் இயற்பெயர் கரோல் வோஸ்டிலா இவர் போப் பதவிக்கு தெரிவானதும் இரண்டாம் ஜோன் போல் என்று பெயர் சூட்டப்பட்டார்.

கடந்த 27 ஆண்டுகளாக கத்தோலிக்கர்களின் தலைவராக இருந்த அவர் இறுதிக் கட்டத்தை எட்டி விட்டதால், புதிய போப்பாண்டவரை தேர்வு செய்வதற்கான ஆயத்தப் பணிகள் வத்திக்கான் நகரில் தொடங்கிவிட்டன. புதிய போப்பாண்டவர் பாரம்பரிய மரபுப்படி தேர்ந்து எடுக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. போப்பாண்டவர் மரணம் அடைந்ததும் வத்திக்கான் நகர அதிகாரிகள் தங்களுக்கு உள்ள அனைத்து அதிகாரங்களையும் தானாகவே இழந்து விடுவார்கள். அந்த அதிகாரங்கள் அனைத்தும் வத்திக்கான் நகரில் உள்ள அப்போஸ்தல அரண்மனை காரியதரிசியிடம் சென்று விடும். இந்தப் பொறுப்பை தற்போது வத்திக்கான் கர்தினால் எதுர்டோ மார்ட்டினேஸ் சோமலா வகித்து வருகிறார்.

புதிய போப்பாண்டவர் தேர்ந்து



எடுக்கப்படும் வரை இவர்தான் கத்தோலிக்க கிறிஸ்தவ அமைப்பின் தற்காலிக தலைவராக இருப்பார். இவர்தான் போப்பாண்டவரின் இறுதிச் சடங்கு ஏற்பாடுகளை செய்வார். போப்பாண்டவர் உடல் அடக்கம் செய்யப்படும் இடம் மற்றும் நினைவிடம் அமைப்பது போன்றவற்றுக்கும் இவர்தான் பொறுப்பு வகிப்பார்.

போப்பாண்டவரின் இறுதிச் சடங்குகள் முடிந்த பிறகு புதிய போப்பாண்டவரை தேர்வு செய்யும் ரகசிய தேர்தலை நடத்தும் அதிகாரமும் இவருக்குத்தான் இருக்கிறது. போப்பாண்டவர் மரணம் அடைந்த இரண்டு வாரத்துக்குள் புதிய போப்பாண்டவர் தேர்ந்து எடுக்கப்படவேண்டும் என்பது விதியாகும். அந்தக் கால கட்டத்துக்குள் இவர் ரகசிய தேர்தலுக்கு வருமாறு அழைப்பு விடுப்பார் அதை ஏற்று கர்தினால்கள் அப்போஸ்தல அரண்மனைக்கு சென்று ரகசிய தேர்தலில் வாக்குப் போடுவார்கள் இந்த வாக்கெடுப்பு அரண்மனையில் உள்ள சிஸ்டின் பிரார்த்தனை கூடத்தில் நடைபெறும்.

உலகம் முழுக்க பல்வேறு நாடுகளில் உள்ள 120 கர்தினால்கள், வாக்களித்து புதிய போப்பாண்டவரை தேர்ந்தெடுப்பார்கள் கடைசியாக எடுத்த கணக்கெடுப்புப்படி 119 கர்தினால்கள் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 90 சதவீதம் பேர் தற்போது வத்திக்கான் நகரிலுள்ளனர். வாக்கெடுப்பு நடக்கும் தினத்தன்று 119 கர்தினால்களும் அப்போஸ்தல அரண்மனைக்கு சென்றதும், அரண்மனையின் கதவு, ஜன்னல்கள் மூடப்படும் அங்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் எந்த கர்தினாலுக்கு மூன்றில் இரண்டு மடங்கு பேரின் ஆதரவு கிடைக்கிறதோ அவர் புதிய போப்பாண்டவராக அறிவிக்கப்படுவார் அப்படி மூன்றில் இரண்டு பங்கு வாக்குகிடைக்கா விட்டால் மீண்டும் மீண்டும் ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். 30 தடவை ரகசிய வாக்கெடுப்பு நடத்திய பிறகும் யாருக்கும் பெரும் பான்மை கிடைக்காவிட்டால் புதிய விதிமுறை கடைபிடிக்கப்படும் அதன் படி வாக்களிக்கும் கர்தினால்களில் சரிபாதி எண்ணிக்கையுடன் கூடுதலாக ஒரு வாக்கு பெறுபவர் புதிய போப்பாண்டவராக தேர்ந்து எடுக்கப்படுவார்.

# மதுக்கடை, வணிக வளாகத்தில் தாக்குதல்

# பிரேஸிசில் குழந்தைகள் உட்பட 30 பேர் பலி

(சாபோ)

பிரேஸில் குயின் மாடோஸ் நகரில் ஒரு வணிக வளாகத்தில் திடீர் என்று மர்மக் கும்பல் புகுந்து வணிக வளாகத்திலும் வீதியில் சென்றவர்கள் மீதும் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பெண்கள் குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்துள்ளனர்.

இதே போல நோவா நகரிலும் ஒரு மர்மக் கும்பல் ஒரு மதுக்கடைக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களை சுட்டது. இதிலும் பலர் பலியானார்கள். இந்த இரண்டு நகரங்கலும், போர்க்களம் போல் காட்சி அளித்தது. இரண்டு நகரங்களிலும் நடந்த தாக்குதலில் பெண்கள் குழந்தைகள் உட்பட 30 பேர் பலியானதாக நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பது மர்மமாகவே உள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு எட்டு அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். அதற்குப் பழிக்குப் பழி வாங்க இந்தத் தாக்குதலை அவர்களது ஆதரவாளர்கள் நடத்தி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இராணுவ பொலிசாரே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் இன்னொரு தகவல் கூறுகிறது.

போதைப் பொருள் கடத்தும் கும்பலுக்கு இடையே ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக இந்தத் தாக்குதல் நடந்து இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

# முல்லை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் கோரி நாளை ஆர்ப்பாட்டப் பேரணி

## -கண்டனக் கூட்டத்துடன் மகஜர்களும் கையளிப்பு

(புதுக்குடியிருப்பு)

முல்லைமாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நியமனம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள் ளனர்.

நாளை காலை 9.00 மணியளவில் புதுக்குடியிருப்பில் இவ் ஆர்ப்பாட்டப்பேரணி இடம்பெற வுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும் கஷ்ரப்பிரதேசம், அதிகஷ்ரப் பிரதேசம் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் நியமனம் வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இப்பேரணி இடம்பெற வுள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்கு முன்பாக இருந்து ஆரம்பமாகும் இப் பேரணியானது புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தைச் சென்றடைந்தவுடன் அங்குபொதுக்கூட்டமும் மகஜர் கையளிப்பும் இடம்பெறும்


சிறிலங்கா சனாதிபதி வட-கிழக்கு மாகாண ஆளுநர், மாகாணக் கல்விப்பணிப்பாளர், முல்லை மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு கோரிக்கை மகஜர்கள் இங்கு வைத்துக் கையளிக்ககப்படவுள்ளன. (08)

# மாதாந்த வீரமுரசு நிகழ்வில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(மல்லாவி)

மல்லாவி திருநகர் பகுதியில் மாதாந்த வீரமுரசு நிகழ்வும். மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் திருநகர் தமிழ் வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணியளவில் வித்தியாலய முதல்வர் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அ.அமிதர்லிங்கம் ஏற்றிவைக்க பத்து மாவீரர்களின் திருவுருவப் படங்களிற்கான ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலைகளை மாவீரர்களின் பெற்றோர் அணிவித்தனர். தொடர்ந்து அகவணக்கம், மலர் வணக்கம் என்பன இடம் பெற்றது. இதனையடுத்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கருத்துரைகளை திருநகர் கிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் க. புண்ணியமூர்த்தி, துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் முகாமையாளர் ஜெகநாதன், திருநகர் வித்தியாலய ஆசிரியர் க.முருகேசு ஆகியோர் வழங்க, சிறப்புரையினை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆற்றினார். இந்நிகழ்வில் பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், போராளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (24)



கோணாவில் ஊற்றுப்புலம் பகுதியில் கடந்த புதனன்று சுழிக்காற்றுடன் கடும் மழை பெய்தது. இதனால் கட்டடங்கள் சில சேதமடைந்தன வர்த்தக நிலையமொன்று சேதமுற்றுள்ளதைப் படத்தில் காண்க. (படம்:சோதி)

## - முல்லையில் சுனாமியால் - பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

தமிழீழ கல்விக் கழகத்தின் அனுசரணையுடன் முல்லை மாவட்ட மாணவர் அமைப்பினரால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நேற்று முன்தினம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. கள்ளப்பாடு அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு பத்துத் துவிச்சக்கர வண்டிகளும், சிலாவத்தை தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு இரண்டு துவிச்சக்கர வண்டிகளும், முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவர்களுக்கு பதின்மூன்று துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் கல்விவளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளதாக முல்லைமாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் தெரிவித்தார். (20)

# சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் கிடாச்சூரியில் 78 குடும்பங்கள் நிர்க்கதி!

## -அடிப்படை வசதிகள் வழங்கவும் அரசு மறுப்பு

(செட்டிகுளம்)

**சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பால் கிடாச்சூரியில் 78 குடும்பங்கள் தொடர்ந்தும் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அத்துடன் இம் மக்களிற்கான உணவு நிவாரணம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் அரசினால் மறுக்கப்பட்டுள்ள நிலையில் நெருக்கடிகளுக்கு இவர்கள் முகம் கொடுத்துள்ளனர்.**

இராணுவ ஆக்கிரமிப்புக்களால் 1999 ஆம் ஆண்டு வவுனியா கல்மடுப் பிரதேசத்தில் இருந்தும் மன்னார் இரணைஇலுப்பைக் குளத்தில் இருந்தும் இடம்பெயர்ந்து வவுனியா கிடாச்சூரி நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நலன்புரி நிலையத்தில் 78 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. தற்போது அரசாங்கத்தினால் இந்த மக்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படுவதில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது சொந்த இடங்களில் வாழவிடாது இராணுவம் தமது கல்மடு படிவம் ஒன்று, படிவம் இரண்டு பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடன படுத்தியிருப்பதன் காரணமாகவே இராணுவம் தம்மைத் தமது பிரதேசத்திற்கு செல்ல அனுமதிக்கவில்லை என்று அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் கல்மடுப் பிரதேசத்தில் விவசாயம் செய்ய இராணுவம் அனுமதி வழங்கிய போதும் தற்போது இது நிறுத்தப்பட்டு இருப்பதாகவும் அந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். விவசாயம் செய்ய அனுமதித்த காலத்தில் தமது கிராமத்தில் ஐந்து மணிக்குப் பின்னர் யாரும் இருக்கக் கூடாது என்று இராணுவம் கட்டளையிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஐந்து கிலோ மீற்றர் நடந்து செல்லவேண்டியுள்ளது. அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமாகவே தமது சொந்த இடத்திற்குப் போக முடியாமல் இருப்பதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.



மன்னார் மாவட்டத்தில் திரைப்பட வெளியீட்டுப்பிரிவு அலுவலகம் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டது. அடம்பன் பிரதேச பொறுப்பாளர் றொபேட் நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காண்க.

# மாற்றுப் பயிர்ச்செய்கைத் திட்டத்தின் கீழ் முல்லை. விவசாயிகள் அதிகம் பயன் பெறுகை

## -நடப்பாண்டிலும் முன்னெடுக்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தின் பயிர் மாற்றுத்திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளவுள்ளதாக முல்லை மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் .இ.கோகிலதாசன் தெரிவித்துள்ளார்.

கோட்டைகட்டியகுளம், கல்விளான் குளம், வவுனிக்குளம், தண்ணி முறிப்புக் குளம் உடையார் கட்டுக் குளம், மல்லாவிக் குளம் ஆகிய ஆறு குளங்களின் கீழ் 200 ஏக்கரில் மாற்றுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பயிர்ச்செய்கைக்கான நீரினை நீர்பாசனத் திணைக்களம் வழங்கவுள்ளது.சென்றவருடம் இப்பயிர்ச் செய்கையின் மூலம் பெருமளவான விளைச்சலினை இப்பகுதி மக்கள் பெற்றுக்கொண்டனர். மண்வளத்தைத் தொடர்ந்து பேணுதல், வருமானத்தைப் பெருக்குதல், பெரும் போகத்திற்கான விதை உற்பத்தியினை மேம்படுத்துதல் என்பவற்றுக் காகவே இந்த மாற்றுப் பயிர் செய்கை இந்தக் காலப் பகுதியில் மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(20)

# குமுழமுனைக் கிராமத்தில் மேய்ச்சல்தரை இல்லை

(புதுக்குடியிருப்பு)

முல்லை.கரைதுறைப்பற்று உதவி அரசஅதிபர் பிரிவிலுள்ள குமுழமுனைக் கிராமத்தில் கால் நடைகளை மேய்ப்பதற்கான மேய்ச்சல்தரை இல்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுமார் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் இப்பகுதியில் இருக்கின்ற போதிலும், மேய்ச்சல் தரை இல்லாமையால் தாம் பெரும் அவலங்களை எதிர்நோக்கு வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படும் சமயங்களில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (08)

# ஏ-9.நெடுஞ்சாலையில் குற்றத்தடுப்பு நடவடிக்கை

(மல்லாவி)

மாங்குளம் காவல்துறைப் பணிமனையினர் ஏ-9 நெடுஞ்சாலையில் குற்றத்தடுப்பு நடவடிக்கையினை கடந்த திங்கட் கிழமை தொடக்கம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் போது இரவில் வெளிச்சமின்றி வரும் வாகனங்கள் வீதிக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்தி வைக்கும் வாகன சாரதிகளின் மீதும் சட்ட நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதோடு மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவோர் மீதும் குற்றப்பணம் அறவிடப்பட்டு சட்ட நடவடிக்கையினை எடுத்து வருகின்றனர். (24)

# கூலர் வாகனங்கள் கையளிப்பு

(முல்லை)

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் மேம்படுத்தலுக்காக யு.என்.டி.பி நிறுவனத்தின் 2003 ஆம் ஆண்டுத் திட்டத்தில் மூன்று கூலர் வாகனங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நண்பகல் 11-30 மணிக்கு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தில் பொது முகாமையாளர் சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மூன்று கூலருக்குமான திறப்பினை யு.என்.டிபி நிறுவன திட்டமுகாமையாளர் சாள்ஸ் ஸ்ரிக்லாண்ட் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் அ.மரியராசாவிடம் கையளித்தார்.

2003ஆம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய இந்த வாகனம் தொழில்நுட்ப வேலைகள் முடிவடையாததினாலேயே இப்போது வழங்கப் படுவதாகவும் சுனாமியினால் இந்தக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கூடுதலாக பாதிப்படைந்துள்ளதால் இதன் தொழில்துறை மேன்மை அடையச் செய்ய தாம் உதவவுள்ளதாகவும் யு.என்.டிபி. நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ச. தேவதாஸ் தெரிவித்தார்.

இவர்களுடன் யு.என்.டி.பி நிறுவன நிகழ்ச்சித்திட்ட அலுவலராக கி. அன்ரன் அருள்ஞானம் முல்லை மாவட்ட க.தொ.கூ.ச.சமாசப் பணிப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (20)




கிராமிய அபிவிருத்தி திணைக்கள அனுசரணையுடன் கிளிநொச்சி செல்வாநகர் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் மனையியல் கண்காட்சி நிகழ்வில் பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கு கரைச்சி பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதனைப் படத்தில் காணலாம். (படம:-சோதி)

# உரியவர் பெற்றுக் கொள்க!

(அலுவலக செய்தியாளர்)

விசுவமடு தொட்டியடி ஊடாக கிளிநொச்சி நோக்கிப் பயணித்த பேருந்திலிருந்து பவுண்பென்ரன் ஒன்று கண்டெடுக்கப்பட்டு கரடிப் போக்கில் அமைந்துள்ள தமிழீழ போக்கு வரவுக்கழக உசாவல் பகுதி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரித்துடையவர் தகுந்த ஆதாரங்கள் காட்டி அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

* * *

முள்ளியவளையைச் சேர்ந்த தங்கராசா யோகராணி என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 577183090V மற்றும் நிரந்தர அனுமதி அட்டை என்பனவற்றுடன் பொன்னம்மா தங்கராசா முள்ளியவளை என்பவரது முதியோர் அடையாள அட்டை என்பன கண்டெக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (சோ)

# வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருக!

## அபிவிருத்திச் சபை கோரிக்கை

(தீவகம்)

**வேலணை அரசினர் வைத்தியசாலைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி வைத்தியசாலை அபிவிருத்திச்சபை பல்வேறு தரப்பிடம் மகஜர்களைக் கையளித்துள்ளது.**

1990ஆம் ஆண்டுமுதல் யுத்தத்தால் மருத்துவ சேவைகள் இடை நிறுத்தப்பட்டு முற்றாக இயங்காமல் செயலிழந்திருந்த இம்மருத்துவமனை 1996ஆம் ஆண்டிற்குப் பின்னர் படிப்படியாக இயங்க ஆரம்பித்து தற்போது நாள் ஒன்றுக்கு 100இற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில் வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி இல்லை. நிரந்தரத்தாதிமார்கள் சேவையில் இல்லை. இம்மருத்துவமனைக் கட்டடங்களின் திருத்த வேலைகள் மின்சார வசதிகள் தொலைபேசி வசதிகள் பூர்த்தி செய்யப் படவில்லை. வைத்தியசாலை தரம் உயர்த்தப்படாமல் கிராமிய வைத்தியசாலை என்ற பெயரிலேயே தொடர்ந்தும் இயங்கி வருகிறது எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்தி மருத்துவமனையின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுப்பதுடன், அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டும் என வைத்தியசாலை அபிவிருத்திச்சபை சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (28)

# கள்ளுத்தவறணையை வேறு இடத்திற்கு மாற்ற நாயன்மார்கட்டுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

செம்மணிச் சந்தி நாயன்மார்கட்டு வீதி மக்கள் குடிமனைக்கு அருகிலுள்ள கள்ளுத்தவறணையை வேறு இடத்திக்கு மாற்றக் கோரி இப்பகுதி மக்கள் கையெழுத்து பெறும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றனர்.

இக்கள்ளுத்தவறணையில் குடிப்போரால் இப்பகுதியில் வீண் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் இத்தவறணைக்கு அருகிலுள்ள பேச்சியம்மன் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களும் இதனால் பாதிக்கப்படுவதாகவும் கூறியே இப்பகுதி வாழ் மக்கள் இவற்றை வேறு இடத்திற்கு மாற்றக் கோரி கையெழுத்து பெறும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றனர் (28)

# ஒளிக்கலை ஒன்றியம் யாழ்.இல் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 18 ஆம் திகதி நிதர்சனம் நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலகத்தில் படப்பிடிப்பாளர்களுக்கான 'ஒளிக்கலை ஒன்றியம்' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஒளிக்கலை ஒன்றியத்தின் தலைவராக ஆறுமுகம் பிரபாகரன், செயலாளராக வினோதன், பொருளாளராக கந்தையா சிவபாதம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் அத்தோடு நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் வடமராட்சியில் இவ்வமைப்பின் வடமராட்சி வலயக் கூட்டம் இடம் பெற்றது.

இன்று வலிகாமம் தீவக வலயங்களின் கூட்டம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளது.

# சமுர்த்தித்திட்டத்தின் கீழ் மெலிஞ்சிமுனையில் சந்தை

(தீவகம்)

ஊர்காவல்துறை மெலிஞ்சிமுனையில் சமுர்த்திட்டத்தின் கீழ் தற்காலிக சந்தை ஒன்றை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் மீன் சந்தை மற்றும் மரக்கறிச் சந்தை அமைக்கப்படவுள்ளதாகவும் இச்சந்தை அமைக்கப்படுவதன் மூலம் இப்பகுதி மக்கள் நன்மையடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (28)

# பொதுமயான வளவில் மிதிவெடிகள் சாவகச்சேரி மக்கள் அச்சம்


(தென்மாரட்சி)

சாவகச்சேரி நகர பொது மயானம் இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் இருப்பதால் இங்கு படையினரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் இருக்கலாமெனப் பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சிரமதானப் பணிகளை மேற்கொள்ளும் முன்னர் மிதிவெடி அபாயமின்மையை சம்பந்தப்பட்ட வெடிபெருள் அகற்றும் நிறுவனம் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும் என்றும், மற்றும் இம் மயானத்திற்குச் செல்வதற்கு படையினரிடம் அனுமதி பெற வேண்டும் என்ற நடைமுறைகள் நீக்கப்பட வேண்டும் என்றும், மக்கள் தங்கள் காரியங்களை நிறைவேற்ற சுதந்திரமாகச் சென்றுவரப் படையினரின் நெருக்குவாரங்கள் நீக்கப்பட வேண்டும் என்றும் சாவகச்சேரி மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

# சுவிஸில் பரத நாட்டிய எழுச்சி நடனப் போட்டி நிகழ்வு



1998 ஆம் ஆண்டு சுவிஸ் தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட பரதநாட்டிய எழுச்சி நடனப்போட்டி நிகழ்வான "நாட்டியமயில் - 2005" நிகழ்வு எட்டாவது தடவையாக கடந்த 25 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் குலம் ஆகியோரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனின் ஆரம்ப வாழ்த்துரையைத் தொடர்ந்து தமிழர் நலன்புரிச்சங்க நடன வகுப்பு மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம் பெற்று தொடர்ந்து போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

முதலாம் நாள் நிகழ்வில் கீழ்ப்பிரிவுக்கான தனிநடனம் "அ", "ஆ", "இ" ஆகிய மூன்று பிரிவுகளாக நடைபெற்றன. இதில் 61 மாணவர்கள் பங்குபற்றினர். அதனைத் தொடர்ந்து பாலர்பிரிவுக்கான குழுநடனம், மேற்பிரிவுக்கான தனி நடனம் என்பன நடைபெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்வில் ஆரம்பப்பிரிவுக்கான தனிநடனம், "அ", "ஆ", "இ" ஆகிய மூன்று பிரிவுகளாகவும் மத்திய பிரிவுக்கான தனி நடனம் "அ", "ஆ" ஆகிய இரண்டு பிரிவுகளாகவும், மேற்பிரிவுக்கான குழுநடனமும் நடைபெற்றன.

மூன்றாம் நாள் நிகழ்வில் ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவுகளுக்கான குழுநடனம் மற்றும் சுவிஸ் "நாட்டியமயில் 2005" சிறப்பு விருதுக்கான போட்டியும் நடை பெற்றது.

இதில் 17 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் "நாட்டியமயில் - 2005" என்ற சிறப்பு விருதைப் பெற்றுக் கொண்டார்.

நான்காம் நாள் நிகழ்வில் மத்திய பிரிவுக்கான குழுநடனம் எழுச்சி நாட்டிய நாடகம், என்பன நடை பெற்று மாலை 5.00 மணிக்கு பரிசளிப்பு ஆரம்பமாகி மாலை 8.00 மணிக்கு நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

நான்கு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற இந்நிகழ்வில் சுவிஸிலுள்ள 10 நடனாலயங்களைச்சேர்ந்த 543 போட்டியாளர்கள் பங்குபற்றினர். 283 போட்டி நடனங்கள் இடம் பெற்றுள்ளன.

திருக்கோணேஸ்வர நடனாலய திருமதி சந்திரவதனி விஜயசுந்தரம் அவர்களின் மாணவி கஜானி சாந்தமூர்த்தி சுவிஸ் "நாட்டியமயில் 2005" என்னும் சிறப்பு விருதைப் பெற்றுக்கொண்டார்.

எழுச்சி நாட்டிய நாடகத்தில் பரதாஞ்சலி நடனாலய மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இதனைப் பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி அனுஷியா சற்குணநாதன் சுவிஸ் "நெருப்பின் சலங்கை 2005" என்னும் சிறப்பு விருதைப் பெற்றுக் கொண்டார்.

# கிளி.இல் 16,461 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக்கொடுப்பனவு வழங்கல்

## நிகொட் மாவட்ட பணிப்பாளர் தகவல்

(விசுவமடு)

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான நிவாரணக் கொடுப்பனவான 25 ஆயிரம்ரூபா மீளக் குடியேறிய 16 ஆயிரத்து 461 குடும்பங்களுக்கு நிகொட் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நிகொட் நிறுவனப் பணிப்பாளர் கோ.பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில; மீளக்குடியேறிய மக்களுக்கான மீள் குடியமர்வு பத்திரங்கள் வந்து சேர்ந்தவுடன் மீள்குடியமர்வுக்கான பணம் தாமதமின்றி வழங்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார். (46)

# அக்கராயன் பிரதேச தே.எ.பேரவையின் சங்கம நிகழ்வு




(அலுவலக செய்தியாளர்)

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைகளின் சங்கம நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்கந்தபுரம் முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

அக்கராயன் பிரதேச போர் எழுச்சிக் குழு செயலர் சபாரத்தினம் தலைமையில் பகல் 10.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழீழ தேசியக் கொடியினை கிளி.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து முதல் மாவீரின திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அக்கராயன் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் அருளானந்தம் ஏற்றிவைக்க, தியாகி அன்னை பூபதி அவர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை ஏற்றிவைத்தார். அதனையடுத்து பேராளர்களின் சங்கமநிகழ்வு இடம்பெற்றது.

வரவேற்புரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை அரசறிவியல்கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா நிகழ்த்தினார். கருத்துரைகளை கிளிமாவட்ட போர் எழுச்சிக்குழு செயலர், கிளி மாவட்ட போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் முத்து, கிளி. மாவட்டகல்விக் கழக பொறுப்பாளர் ஜீவராஜ், கிளி.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி கிளி.மாவட்ட தேசியஎழுச்சிப்பேரவை பொறுப்பாளர் அருள், கிளி. மாவட்ட நிர்வாக சேவையைசேர்ந்த ராதை ஆகியோர் வழங்கினர்.

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை பேராளர்கள் பெருமளவில் கலந்து கொண்டு கருத்துரைகளை தெரிவித்ததுடன் பிரதேச அபிவிருத்தி தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைக்கான திட்டங்கள் பேராளர் சங்கம நிகழ்வில் முன்வைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பாடசாலைகளின் வளப்பங்கீடு கல்வித் தரத்தை மேம்படுத்தும்!

யுத்த காலங்களிலும் சரி, சமாதான காலங்களிலும் சரி வன்னியிலுள்ள பாடசாலைகள் நிறையக் குறைபாடுகளுடனும், நிவர்த்தி செய்யப்பட முடியாத பெரும் நெருக்கடிகளின் மத்தியிலும் செயற்பட்டு வருகின்றன. மாணவர்களின் எதிர்காலத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவர அதிபர்கள், ஆசிரியர்கள் பல குறைபாடுகளின் மத்தியிலும் கடுமையான முயற்சிகளை எடுத்து கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான குறைபாடுகள் வன்னிப் பகுதியைப் பொறுத்தமட்டில் போராட்ட காலங்களை விடவும் தற்போது பெரும் நெருக்கடிகள் எதிர்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது.



பாடசாலையின் தற்காலிக கொட்டகையின் ஒருபகுதி

இன்றைய சமாதான சூழ்நிலையில் வன்னிப்பகுதிப் பாடசாலைகள் பல எல்லாத் துறைகளிலும் முன்னேறிச்செல்ல ஒரு சில பாடசாலைகள் தொடர்ந்தும் பின்நோக்கிய நிலையில் இருப்பது மாணவர் சமூகத்திற்குப் பெரும் பின்னடைவையே ஏற்படுத்தி வருகின்றது.

இதற்கு முக்கிய எடுத்துக்காட்டாக வன்னியின் கிராமப்புறங்களான கற்சிலைமடு, முத்துஜயன்கட்டு, சம்மளங்குளம், வேலன்குளம், மாறாயிலுப்பை போன்ற பல பகுதிப் பாடசாலைகளில், பெரும்பாலும் அந்த ஊர் ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொள்வதில்லை. பதிலாக வேறு மாவட்டங்களிலிருந்தும், அரச கட்டுப்பாட்டுப்பகுதியிலிருந்தும் வந்து கற்பித்தலை மேற்கொள்பவர்களே உள்ளனர்.

இவ்வாறு அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வந்து கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்,பாடசாலையின் தரமும்,பொருத்தமற்ற ஆசிரியர்களை நியமித்தலும், பாடசாலை வளாகம், பாடசாலையில் அத்தியாவசியமாக இருக்கவேண்டியவை பல இல்லாமல் செயற்பட்டு வருவதும் வெளிப்படையான உண்மையாகும்.


முத்துஜயன் கட்டு இடது கரை அரசினர் தமிழக் கலவன் பாடசாலை இவற்றிற்கு ஒரு உதாரணம் தான். அப்பாடசாலையின் தற்போதைய நிலைகளில் நாம் நேரில் கண்டவற்றை இங்கு தருகிறோம்.

முத்துஜயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலையானது `450 மாணவர்களைக் கொண்டு தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரையான வகுப்புக்களைக் உள்ளடக்கிய பதினொரு நிரந்தர ஆசிரியர்களையும், ஐந்துதொண்டர்ஆசிரியர்களையும் வைத்துப் பல சிரமத்தின் மத்தியில் கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலையின் முக்கிய பிரச்சினை என்னவெனில் ஆசிரியர் பற்றாக்குறை, அத்துடன் பொருத்தமற்ற ஆசிரியர்களை நியமித்தும் இருப்பது.

## பின்தங்கிய பகுதிகளின் நிலை?

குறிப்பாகக் கணிதம், சமுகக்கல்வி, விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் நிரந்தரமாக இல்லை. பதிலாக அப்பாட சாலையில் இல்லாத ஒரு பாடத்துக்குரிய ஆசிரியர்களை நியமித்துமுள்ளனர். அதாவது மேற்படி பாடசாலையில் தச்சு வேலைப் பாடம் இல்லை. ஒரு மாணவர் கூட அப்பாடத்தைக கற்பதில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அப்பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களை நியமிப்பதற்குப் பதிலாக பொருத்தமற்ற பாட ஆசிரியர்களை நியமித்ததனால் அவ்வாசிரியர் பாடசாலைக்குச் சென்று எதைப்படிப்பிப்பது என்ற நிலையில் நித்தமும் பாடசாலை வந்து செல்கின்றார்.



சேதமுற்ற கூரையுடன் கூடிய வகுப்பறையில் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்

அடுத்த முக்கிய பிரச்சினை ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாகத் தொண்டர் ஆசிரியர்கள் ஐந்து பேரை கற்பிக்கும்படி விடப்பட்டபோதும் அவர்களுக்குரிய வேதனம் மாணவர்களிடமிருந்தே அறவிடப்படுகின்றது. அதுவும் சீரான முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆக இரண்டு தொண்டர்களுக்கு கியூடெக் நிறுவனம் வேதனம் வழங்கி வருகின்றது.

இதேபோன்று வேறு மாவட்டங்களில் இருந்து வரும் ஆசிரியர்கள் குறிப்பாக வவுனியா, யாழ்ப்பாணப் பகுதி ஆசிரியர்கள் பலர் வந்து கற்பிக்கின்றனர். அவர்கள் இங்குவருவதைப் பெரும் சிரமமாகவே கருதுகின்றனர். இது உண்மையும் கூட. ஏனெனில் முத்துஜயன்கட்டு செல்வதற்கு குறிப்பிட்ட நேரத்தைத் தவிர வேறு பேருந்துப்பணி யில்லை. வீதிகள் மிகவும் மோசமான சூழ் நிலையிலுள்ளது.

இவற்றையும் தாண்டிப் பாடசாலை சென்றால் கூட அங்கு தங்குவ தற்கு ஆசிரியர் விடுதிசீரானதாக இல்லை. இவ்வாறு இருக்கும் போது அவ்வாசிரியர்கள் எவ்வாறு முழுமனதுடன் கற்பிக்க முடியும்.

அத்துடன் ஆசிரியர் ஓய்வு விடுதியும் அங்கு இல்லை. அதிபரின் காரியாலயத்திலும், வகுப்பறைகளிலுமே ஆசிரியர் தமது ஓய்வு நேரத்தைக் கழிக்கின்றனர்.

அடுத்து தரம் பதினொன்று வரை இயங்கும் இப்பாடசாலையில் விளையாட்டுப்போட்டிகளைத் திறம்படச் செய்வதற்கு உரிய விளையாட்டுமை தானம் இல்லை. இப்பாட சாலைக்குரிய விளையாட்டு மைதானம் பெரும்காடாக உள்ளது. தற்போது பாட சாலை வளாகத்திற்குள்தான் போட்டி கள் நடைபெற்று வருகின் றன.



முற்றுப்பெறாத நிலையில் புதிய பாடசாலைக் கட்டடம்

மேலும் பாடசாலையில் உணவு வழங்குவதற்கென ஒழுங்குபடுத்தப்பட்ட போதி லும் அவ் உணவு உரியமுறையில் வழங்கப்படுவதில்லை. பாவனைக்குதவாத அரிசியைப் பயன்படுத்துதல், தாமதமான நிலையில் பொருட்களை அனுப்புதல் போன்றவற்றால் பெரும்சிரமத்தின் மத்தியில் உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

அடுத்த முக்கியமான விடையம் 450 மாணவர்களுக்கும் ஒழுங்கான மலசலகூட வசதியில்லை. பழமை வாய்ந்த ஒரு மலசலகூடத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர். குடிநீரினைப் பொறுத்தமட்டில் கிணறு இருந்தும் அந்நீரினை ஏனைய பாடசாலைகள் போன்று நீர்க்குழாய்கள் மூலம் வழங்க இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிறிய மாணவர்கள் கிணற்றில் நீர் அள்ளுவது என்பது ஆபத்தான விடயம் என்பதை அனைவரும் அறிவார்கள்.

வகுப்பறைப் பிரச்சினையை நிவர்த்தி செய்ய கார்ப்திட்டத்தின் கீழ் இரண்டு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அவை ஒப்பந்தக்காலம் முடிந்தும் இன்னும் வேலைகள் பூரணமாக முடிக்கப்படாத நிலையிலுள்ளன.

இவற்றுடன் வளந்துவரும் இப்பாடசாலையில் நூலகமோ, ஆய்வுகூட வசதியோ இல்லை. இத்தனைக்கும் மத்தியில் பாடசாலை பிரதான கட்டடத்தின் பின்பகுதி பெரும் காடாக உள்ளது. வேலி என்பது இல்லை.

எனவே மேலே கூறப்பட்ட இவ்வளவு பெரும் பிரச்சினைகளுக்கும் மத்தியில் அப்பாடசாலை இயங்கி வருகின்றது என்றால் அது அப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் கடுமையான அர்ப்பணிப்பும், மாணவர்களின் ஒத்துழைப்பும் என்றுதான் கூற முடியும்.

எனவே யுத்தகாலத்தில் வன்னிப்பகுதிப் பாடசாலைகள் சிரமமப்பட்டது ஒருபுறமிருக்க தற்போதைய சமாதான கால்ச்சூழ்நிலையில் ஏனைய பாடசாலைகள் ஓரளவேனும் வளர்ச்சி கண்டுள்ள நிலையில் முத்துஜயன்கட்டுப் பாடசாலை இவ்வாறான ஒரு நிலையில் இருப்பது அப்பகுதி மக்களுக்குப் பெரும் வேதனையையும், எமது மாணவர்களும் முன்னேற வழியில்லையா? என்றொரு ஏக்கத்தையும் ஏற்படுத்தி வருகின்றது.

**தூ. குகனேஸ்வரன்**

---

## முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய பிரதேச கட்டமைப்புத் தெரிவு

மன்னார் மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் இலுப்பைக்கடவைப் பிரதேசத்திற்கான பிரதேச கட்டமைப்புத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது இதில் மன்னார் மாவட்ட த.பு.கழகப் பணிப்பாளர் அ.கேசவன், மடு வலய முன்பள்ளி உதவிக் கல்விப பணிப்பாளர் எஸ். எஸ்.சேகிரட்னாட், இலுப்பைக் கடவைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் விப்பிரியா, வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் அ.பூலோகசிங்கம் ,முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய மன்னார் மாவட்ட இணைப்பாளர் செல்வி சோ.கௌரீஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 20 முன்பள்ளிகளின் ஆசிரியர்களும், பெற்றோர், ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டதுடன் தொடர்ந்து தலைமைக் கருத்துரை, சிறப்புரை என்பவற்றுடன் பிரதேசக் கட்டமைப்பு புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது.

## சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கலைச்சுடர் சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா இராமநாதபுரத்தில் எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் சு.இரவீந்திரன் தலைமையில் அன்றையதினம் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

## முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஊடாக இணைப்பாளர்களுக்கு வேலைப்பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், போரூட் நிறுவனமும் இணைந்து வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையம் ஊடாக முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர்களுக்கான வேலைப்பட்டறை ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

போரூட் நிறுவனத்தின் முன்பள்ளிக் கல்வித் தொடர்பாளர் திருமதி. தயாமோகன் இவ்வேலைத் திட்டப் பட்டறையை நெறிப்படுத்தி வருகின்றார். வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள 24 கல்வி வலயங்களும் சேர்ந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளரும், வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனச் செயலாளரும், போரூட் நிறுவன சிறுவர் உரிமைகள் செயற்றிட்டத் தொடர்பாளரும் இதில் கலந்து கொண்டனர். (கு)

# எரிபொருள், மின்சாரம்: பற்றி எரியும் பிரச்சினைகள்

**வேலவன்**

இப்பொழுது சிறிலங்காவில் இரண்டு நிறுவனங்கள் தொடர்பான விவகாரங்கள் எரியும் பிரச்சினையாக மாறியுள்ளது. முக்கியமான இரண்டு சக்தி வளங்களான பெற்றோலியம், மின்சாரம் ஆகியவற்றை நிர்வகிக்கும் நிறுவனங்களை மறுசீரமைத்தல் அல்லது தனியார் மயமாக்கல் என்பது குறித்தவிவகாரமே பெரும் சர்ச்சைகளைக் கிளப்பிப் போராட்டங்களுக்கு வித்திட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தவரை அதன் பங்குகளை விற்பது என்றும் மின்சாரசபையை மறு சீரமைப்பது என்றும் அரசாங்கம்/சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூறுகின்ற போதும் இரண்டும் வெளியாருக்கு விற்கப்படவுள்ளதாகவே தொழிற்சங்கங்களும் ஜே.வி.பியும் கூறுகின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தவரை கடந்த ஐக்கிய தேசியக்கட்சி அக்கட்சிக்காலத்திலேயே அதன் பங்குகள் தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்பட ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அப்போது அக்கூட்டுத்தாபனத்தின் பங்குகளின் மூன்றில் ஒரு பங்கை இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்கும் இன்னொரு மூன்றிலொரு பங்கை "சிபொட்கோ" நிறுவனத்துக்கும் விற்றிருந்தது. மற்றைய மூன்றிலொரு பங்கு அக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான பங்காக ஒதுக்கப்பட்டு அது திறைசேரியிடம் இருந்தது. இந்தப்பங்கை முன்னைய ஐ.தே.க. ஆட்சி சீன நிறுவனமொன்றுக்கு வழங்க எடுத்த முயற்சி தொழிற்சங்கங்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

இப்பொழுது இந்தப்பங்கைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என பெற்றோலியக்


பெற்றோலுக்கு வரிசை..

கூட்டுத்தாபன ஊழியர்கள் வலியுறுத்து கின்றனர். ஆனால் அரசாங்கமோ அதனை இந்திய நிறுவனம் ஒன்றிற்கு விற்றுவிட முயல்கின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எஞ்சிய பங்குகளை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் வழங்கவேண்டும். அல்லது போராட்டம் வெடிக்குமென தொழிற்சங்கங்கள் கடும்தொனியில் எச்சரிக்கை விடுக்கின்றன. கடந்த தேர்தலின்போது இக் கூட்டுத்தாபனத்தின் பங்குகள் விற்கப்பட மாட்டாதென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வாக்களித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

விற்பனை தொடர்பாக கடந்த 23ஆம் திகதி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோது ஜே.வி.பியின் கடும் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்டது. ஏற்கனவே வழங்கப்பட்ட நிறுவனங்கள் எரிபொருள் நிலையங்களின் செயற்பாட்டில் முன்னேற்றம் எதனையும் காட்டாத நிலையில் எஞ்சிய பங்குகளை விற்பதில் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை என ஜே.வி.பி. தெரிவித்தது.

ஏற்கனவே உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ள தாகக் காரணம் காட்டி எரிபொருட்களின் விலையை அதிகரித்துள்ள நிலையில் அதற்கு வழங்கிவரும் மானியத்தை நிறுத்தப்போவதாகவும் அரசாங்கம் கூறிவருகிறது.

இதேவேளை மின்சாரசபையைப் பொறுத்தவரை அதனை மறுசீரமைக்கப் போவதாக அரசாங்கம் கூறிவருகிறது. இலங்கை மின்சாரசபை தனது வலுவுக்கு ஏற்ப அல்லாது மேலதிகமாகத் தேவைப்படும் மின்சாரத்தைத் தனியாரிடமிருந்து கொள்வனவு செய்தே விநியோகம் செய்து வருகின்றது. கொத்மலை, நுரைச்சோலை மின்நிலையங்கள் அமைக்கப்படும் வரை இந் நிலையையே தொடரவுள்ளது. ஆனால் இந்த மின்நிலையங்களை அமைப்பதற்கு நீண்ட காலமாகக் கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டு வரும் நிலையில் தனியாரிடமிருந்து மின்சாரத்தை கூடுதல் விலைக்கு வாங்கி அதனை குறைந்த கட்டணவிகிதத்தில் விநியோகித்து வருவதாக அது கூறுகிறது.

மானியம் வழங்க திறைசேரி மறுத்துவிட்ட நிலையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் மின்சார சபை கோரிவருகின்றது. இதேவேளை தனியார் மின்சார நிறுவனங்களிடமிருந்து பெற்ற மின்சாரத்துக்காக 90 கோடி டொலர்கள் செலுத்தவேண்டியிருப்பதாகவும் அக்கடனைச் செலுத்துவதற்கு அந்நிறுவனங்கள் காலக்கெடு விதித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மின்சாரசபை அரசவங்கிகளில் குறுங்காலக் கடனாக 36 பில்லியன் ரூபாக்களைப் பெற்றுள்ளது. இதனைச் செலுத்தக்கூடிய நிலையில் மின்சாரசபை இல்லாததால் தாம் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நீண்டகாலக் கடன்களைப்பெற முயற்சிகளைக் மேற்கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. அதாவது இந்த நெருக்கடிகளிலிருந்து நீங்க ஆசிய அபிவிருத்தி வங்கி கடன்வழங்க முன்வந்த போதும் அது மின்சாரசபையில் மறுசீரமைப்பைக் கோருகின்றது. அந்த மறுசீரமைப்பிற்கே மின்சாரசபை ஊழியர்களும் ஜே.வி.பியும் முட்டுக்கட்டை போடுவ்தாக அரசாங்கம் கூறுகின்றது. அதாவது தாம் மறுசீரமைப்புக்கே முயல்வதாகவும் விற்றுவிட அல்ல. என்றும் அதுமேலும் கூறுகின்றது.

எத்தகைய தடைகளையும் தாண்டி அரசு தனது திட்டத்தை நிறைவேற்றியே தீரும் என அது சூளுரைத்து வருகின்றது. ஜே.வி.பிக்கோ 14 ஆயிரம் ஊழியர்களுக்கோ அஞ்சி மக்களுக்கு நலன்தரும் திட்டங்களை அரசாங்கம் கைவிட இயலாது என்றும் அது கூறுகின்றது.

இறுதியாக வெளியாகியுள்ள தகவலின்படி இவ்விரு நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டுமானால் இலங்கை மின்சார சபைக்கு அரசவங்கியினால் வழங்கப்படும் கடனுதவிகளை நிறுத்தவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அரசாங்கம் வழங்கும் மானியத்தை நிறுத்தவும் இணங்கவேண்டுமென ஜே.வி.பி யிடம் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்நிலை ஏற்படுமானால் எரிபொருள், மின்சாரக்கட்டணம் மிகவும் அதிகரிக்கும் என்பது வெளிப்படையானதாகும்.

ஆனால் கடந்த பெப்ரவரி மாதத்தில் எரிபொருள் மின்சாரதுறை அமைச்சர் சுசில்பிரேம ஜெயந்தவிற்கும் மின்சாரசபை தொழிற்சங்கத்தினருக்கும் இடையே நடந்த பேச்சுக்களின் போது மின்சார சபையைத் தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது. மின்சார சபையைத் தனியார் மயப்படுத்தும் முயற்சிகளில் முன்னிற்கும் சபையின் செயலாளரைப் பதவி நீககம் செய்வது என்பவற்றிற்கு உடன்பட்டிருந்தார்.

ஆனால் ஒரு மாதகாலத்தில் மின்சார சபை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பன தொடர்பான பிரேரணைகளை அவர் அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

ஆனால் இதற்கு ஜே.வி.பி காட்டிய எதிர்ப்பின் காரணமாக பிரேரணையைக் கொண்டுவருவது நிறுத்திவைக்கப்பட்டு மீண்டும் கடந்த திங்கட்கிழமை விசேட அமைச்சரவைக்கூட்டத்தில் ஆராய்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஜே.வி.பி யின் மிரட்டல்களையடுத்துக் கைவிடப்பட்டது.

ஜே.வி.பி இவ்விடயங்களை எதிர்ப்பதற்கு வழமையான காரணங்களைத்தான் கூறிவருகின்றது. அதாவது தேசிய சொத்துக்களை வெளியாருக்கு விற்பதற்கு அனுமதிக்க முடியாது என்பதே அதுவாகும்.

இந்நிலையில் ஜே.வி.பி யின் இச் செயற்பாடானது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் வாக்குறுதி ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி உருவாகியபோது செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தம் என்பவற்றின் அடிப்படையில் இவற்றை எதிர்ப்பதாக ஜே.வி.பி கூறிவருவதால் மேலும் அரசாங்கம் அதிருப்தியுற்றுள்ளது.

சிறிலங்காவைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள பல நிறுவனங்கள் நட்டத்திலேயே செயற்பட்டு வருகின்றன. இவ்வாறு நட்டமேற்படுவதற்கு அவற்றின் நிர்வாகத்திறன் இன்மையே காரணம் எனத் தொழிற்சங்கங்கள் உலக நிதிநிறுவனங்கள் என்பன குற்றம் சாட்டுகின்றன. சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கூட அரசநிறுவனங்களின் செயற்றிறனின்மை உயரதிகாரிகள் மட்டத்தில் நிலவுகின்ற லஞ்ச, ஊழல் என்பன குறித்து அடிக்கடி குற்றம் சாட்டி வருகின்றார்.

அரசாங்கம் மானியம் வழங்கவேண்டிய நிலையிலுள்ள நிறுவனங்களைத் தனியாருக்கு விற்று தனது சுமையைக் குறைத்துக்கொள்ளப் பார்க்கிறது. அவ்வாறு அந்நிறுவனங்களை வாங்கும் தனியார் மக்களின் நலன்கருதிச் செயற்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. இப்பொழுது கட்டணங்களை உயர்த்தவேண்டியேற் படலாம் என்பதற்காக அவற்றைத்தனி யாருக்கு விற்க முற்பட்டால் எதிர்காலத்தில் அதனை விட மோசமான விளைவுகள் ஏற்படலாம்.

இந்நிலைமைக்கு மூலகாரணமாகவுள்ள தவறைத் திருத்துவதைவிடுத்து குறுகிய நோக்கத்தோடு மேற்கொள்ளபடும் நடவடிக்கைகள் நீண்டகால அடிப்படையில் தீங்கு விளைவிக்கக் கூடும். ஆனால் அதைவிடக் குறுகியகால நன்மைக்காக எத னையும் செய்ய அரசாங்கம் தயாராக உள்ள மையே இன்றைய போராட்டங்களுக்குக் காரணமாக அமைகிறது என்று கூறலாம்.

## கிளிநொச்சி நகர பொதுச்சந்தையில் மாத இறுதியில் வாராந்த சந்தை ஆரம்பிக்கும்

### –நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானம்

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளினதும் குறிப்பாக மரக்கறி உற்பத்தியாளர்களினதும் நன்மைகருதி கிளிநொச்சி நகர பொதுச் சந்தையில் வாராந்த சந்தையை ஆரம்பித்து நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணிக்கு கிளி. மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனக் காரியாலயத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளி.மாவட்ட பொறுப்பாளர் மு.செந்தில் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள், மரக்கறி உற்பத்தியாளர் எனப்பலர் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கினர். இம்மாத இறுதிக்குள் வாராந்த சந்தையை ஆரம்பிக்க வேண்டு மென்றும் இதற்கான ஒரு குழுவும் ஆரமபிக்கப்பட்டது. மேலும் வாராந்த சந்தை தொடர்பாக எதிர்வரும் எட்டாம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடைபெறும் எனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு இறுதியில் சம்மேளச் செயலாளரின் நன்றியுரையுடன் கலந்துரையாடல் நிறைவு பெற்றது.

## தமிழ் நாட்டிலிருந்து போதைப்பொருள் கடத்திய ஆறுபேருக்கு விளக்கமறியல்

போதைப் பொருள் கடத்தியதாள சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கைத் தமிழர்களையும் நான்கு இந்தியரையும் ஏப்ரல் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர்களில் ஐவர் தலைமன்னாரிற்கு ஒரு வள்ளத்தில் 1.200 கிலோ கிராம் போதைப்பொருளுடன் பயணம் மேற்கொண்ட போது சிறிலங்காக் கடற்படையால் கைது செய்யப்பட்டுப் பொலிசாரிடம் ஒப் படைக்கப்பட்டனர்.ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் மற்றுமொரு நபரையும் கைது செய்து மன்னார் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.இதனையடுத்து மன்னார் நீதவான் மேற்படி ஆறு சந்தேக நபரையும் ஏப்ரல் 12 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்க கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்



# அனர்த்தத்தைத் தடுக்க கடலணைத் திட்டம்

ஆழிப்பேரலையின் அனர்த்தத்தைத் தவிர்க்க கடலணைத்திட்டத்தை நடை முறைப்படுத்தப்போவதாக சுற்றாடல் துறைஅமைச்சர் ஏ.எச்.எம்.பெளசி தெரிவித்துள்ளார். ஆழிப்பேரலையின் பின்னர் கடலில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் கட்டடங்கள் அமைக்கப்படவேண்டுமென ஐக்கியதேசியக் கட்சி வலியுறுத்தி வருகிறது.

எனினும் அரசாங்கம் கடலணைத் திட்டத்தைக் கட்டாயமாக நடை முறைப்படுத்தப்போவதாகத் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் குறித்த பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு தமது யோசனை வழிவகுக்கும் என்றும் அமைச்சர் பெளசி தெரிவித்துள்ளார்.

# மின்சார சபை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறித்து இரு மாற்று யோசனைகள் அரசால் முன் வைப்பு

## -ஜே.வி.பி யுடன் இறுதி முடிவு விரைவில் எட்டப்படுமாம்

(கொழும்பு)

சிறிலங்கா மின்சாரசபையை சீரமைத்தல் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப்பங்குகளை இந்தியக் கம்பனியொன்றுக்கு விற்பனை செய்தல் என்பன தொடர்பாக அரசு ஜே.வி. பியினருக்கு இருமாற்று யோசனைகளை முன்வைத்துள்ளது. சர்ச்சைக்குரிய இந்த யோசனைகள் குறித்த இறுதி முடிவுகள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா மின்சார சபையை மறுசீரமைத்தல் மற்றும் திறைசேரி வசமிருக்கும் சிறிலங்காப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்குகளில் மூன்றில் ஒன்றை பாரத் பெற்றோலியம் நிறுவனத்திற்கு வழங்குதல் என்பன தொடர்பிலான இறுதி முடிவு அடுத்த சிறிலங்கா அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் அரச மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறவுள்ளன. இவ்விரு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமானால் அதற்குப் பதிலாக இரு மாற்று யோசனைகளை அரசு மக்கள் விடுதலை முன்னணிக்கு முன்வைத்துள்ளது. சிறிலங்கா மின்சார சபைக்கு அரச வங்கிகளான மக்கள்வங்கி மற்றும் இலங்கை வங்கியினால் வழங்கப்படும் கடனுதவிகளை நிறுத்துதல் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் மானியங்களை நிறுத்தல் ஆகியனவே அவ்யோசனைகளாகும். அரசின் இவ் யோசனைகள் நிறை வேற்றப்படுமாயின் சிறிலங்கா மின்சார சபை தற்போது இருப் பதைவிட மேலும் நெருக்கடிக் குள்ளாகும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான மானியம் நிறுத்தப் பட்டால் சந்தையில் எரிபொருளின் விலை உடனடியாக அதிகரிக்கும். சிறிலங்கா மின்சார சபை தேசிய ரீதியாகப்பெற்றிருக்கும் குறுங்காலக் கடனானது 36 பில்லியன் ரூபாவாகும். அதன் நீண்டகால கடனானது 60 பில்லியன் ரூபாவாகும். இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களுக்கு 5,000 மில்லியன் ரூபாவை சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மானியமாக அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது. அது தவிர அதற்கு முற்பட்ட காலங்களுக்காக 6,500 மில்லியன் ரூபா மானியத்தொகை நிலுவையிலுள்ளது.

# சாவு அறிவித்தல்

## அமரர். செபஸ்தியாம்பிள்ளை யோசேப்

## (இராசதுரை-ஞானம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

வாடியடி பூநகரியைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திரு.செபஸ்தியாம் பிள்ளை யோசேப் (இராசதுரை-ஞானம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) அவர்கள் 2005.04.02 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை அகால மரணமானார். அன்னார் காலம்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை, ஞானம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலம்சென்ற கந்தப்பிள்ளை சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பிலோமினா,சிவபாக்கியம், ஆகியோரின் பாசமிகுகணவரும், பிரான்சிஸ் (இராசரத்தினம் உரிமையாளர், ஜெயா ஸ்ரோர்ஸ்பூநகரி), மாசில்லாமணி (கிராமஅலுவலர். மட்டுவில்நாடு மேற்கு பூநகரி), பர்ணாந்து (ஜெயந்திநகர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பெனடிற்(ரவிஉரிமையாளர், மருத்தாய் பல்பொருள் உதிரிகள் வாணிபம், கிளிநொச்சி), மரியரஞ்சினிதேவி (ஜேர்மன்) சத்தியசீலன், (எழுதுவினைஞர் வலயக் கல்விப் பணிமனை , புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), இராஜேஸ்வரி, றெஜினா, ஞானேஸ்வரி, சகாயசீலன் (இராசன், உரிமையாளர் தெய்வத்தாய் களஞ்சியம், பூநகரி), ஞானசௌந்தரி, சுசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீற்றம்மா, நீற்றா, மேரிறெஜினா, ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயகௌரி, இரகுநாதன் (ஜேர்மன்), விமலேஸ்வரி (பொதுசுகாதார மருத்துவமாது- புதுக்குடியிருப்பு), சிவகடாட்சம் (உரிமையாளர், சிவனடி பல்பொருள்வாணிபம், கந்தபுரம்), அருந்தமிழ்ச்செல்வன் (கிராம அலுவலர், சிவநகர்/கோணாவில்), ஜெகதீசன், லக்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜென்சியா, பிறின்சியா, ஜெயான்சி, நியான், விதுஷன், கேதுஷன், மேனுஜா, நிரோஜன், கஜீவன்,சஜீவன், குலதீபன், நிதர்சன், லியான்சியா, டெனிற்றா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பூநகரி வாடியடி இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக 2005.04.03 ஆம் திகதி இன்று முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு, அடைக்கலமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

*தகவல்-*

வாடியடி,
பூநகரி.

*மனைவிமார்,பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.*

(சி.11619)

# 99ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்



அன்னையின் மடியில் 27 □ 05 □ 1972

அலைகடல் அடியில் 26 □ 12 □ 2004

## தவராசா பரமதேவ்

### உடுத்துறை வடக்கு, வடமராட்சி கிழக்கு.

நீலவானமதை கடல் நீர் எழுந்து மறைத்ததுவோ,
நீசனாய் வந்து அலை எம் நிம்மதியைக் குலைத்ததுவோ,
ஆனந்தமான எம் வாழ்வில் அலை எழுந்து அடித்ததுவோ,
அன்பான எங்கள் அம்மாவின் உயிர் பிரிந்ததுவோ,
விழியினில் நீரின்றி-எம் வாழ்வினில் விடியலின்றி
விதி என்று நாம் கதி கலங்கி நிற்கின்றோம்.
பத்துத் திங்கள் சுமந்து பெற்ற அன்னையே
பறந்து போனதுதான் எங்கே-பாவிகள் நாம் இன்று
பாரினிலே தவிக்கின்றோம். அம்மா அம்மா-என்று
அழும் ஒலி ஆகாயத்தைத் தொடுகிறது-எங்கள்
ஆனந்தம்தான் இப்போ அடியோடு சரிந்தது.
தாயேஉந்தன் முகம் பார்க்கத் தவிக்கின்றோம்.
தவம் இருக்கின்றோம்-தம் வரவைப் பார்த்துமே
அள்ளி அணைத்து அன்னம் ஊட்டியவளே
தாலாட்டுப் பாடிய தாயே தவிக்கின்றோம் நாம்இன்று
தரணியிலே தாய் இன்றி வந்திடுவீர் எம் வாசல்,
வணங்கிடுவோம் உன்பாதம்.

03.04.2005 ஞாயிறு இன்று நடைபெறும் எம் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:~ கணவர் சி.தவராசா
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
மருதங்கேணி.

(5958)


# புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை

இன்று முதல் எமது நிறுவனத்தில் பிரதியாக்கம் செய்யும் அனைத்து அளவுகளிலுமான போட்டோக்களை அனைத்து வாடிக்கையாளர்களும் கொழும்பு விலையில் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனை மகிழ்ச்சியு டன் தெரிவிக்கிறோம்.

4R - 9/=

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

யாழ்.வீதி, மானிப்பாய்.

T.P.:- 021 - 222 2884

(சி-11616)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04 □ 08 □ 1947

மறைவு 06 □ 03 □ 2005

## நாட்டுப் பற்றாளர் திரு. கணபதிப்பிள்ளை சிவராசா

[நிதர்சன நிறுவன பணியாளர்]
[முன்னாள் லங்கா சீமெந்து நிறுவன, புலிகளின் குரல் நிறுவன பணியாளர்]

கடந்த 06.03.2005 அன்று காலமாகிய எமது குடும்பத் தலைவர் அவர்களின் 31 ஆம் நாள் நிறைவையொட்டி வரும் 05.04.2005செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும்உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள்,பணியாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

*தகவல்:-*
*மனைவி, மகன்மார்*
*பெறாமகன்,*
*மருமகள்*

நிரந்தர முகவரி:-
விழிசிட்டி, தெல்லிப்பளை.

தற்காலிக முகவரி:-
இல.71 குமரபுரம்,பரந்தன்.

(5955)

### ஐ.நா.பாதுகாப்புச் சபையில்

# வீட்டோ அதிகாரம் இல்லாத உறுப்பினர் பதவியை ஏற்கோம்

## இந்தியா தெரிவிப்பு

(இந்தியா)

**ஐ.நா.பாதுகாப்புச் சபையில் ரத்து அதிகாரம் இல்லாத உறுப்பினர் பதவியை ஏற்கமாட்டோம் என்று இந்தியா அறிவித்துள்ளது. இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகிய நாடுகள் இணைந்து ஜி.-4 'என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளன.**

அந்த அமைப்பு நடத்திய ஆலோசனைக்கூட்டமொன்று நியூயோர்க் நகரில் நடைபெற்றது. இதில் 150 இற்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த தூதர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் சார்பில் ஐ.நா. சபைக்கான இந்தியத் தூதர் நிருபம் சென் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் அவர் பேசுகையில், ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு, ரத்து(வீட்டோ) அதிகாரத்துடன் கூடிய உறுப்பினர் பதவிவழங்க வேண்டும் என்றும், ரத்து அதிகாரம் இல்லாத உறுப்பினர் பதவியை வழங்கினால் அதை ஏற்கமாட்டோம் என்றும் கூறினார்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ள நாடுகளிடையே பாகுபாடு காட்டப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

191 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச்சபையில் பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்து வது சம்பந்தமாக ஏதாவது தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றால் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் களின் ஆதரவு தேவை என்றும், ஆனால் அந்த எண்ணிக்கையை விடக் கூடுதலான உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தாகவும் 'ஜி-4' அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.



மிகப்பெரிய பணக்காரர்கள் மட்டுமே பயணிக்கக் கூடிய "பஹாமால்" என்ற சொகுசுக் கப்பல் இந்தியாவில் முதன்முறையாக கொச்சித் துறைமுகத்திற்கு வந்தது. இதில் அனைத்து நவீன வசதிகளுடன் 81 தனித்தனி அறைகள் உள்ளன.

## பெண்களுக்கு மொட்டையடிக்க பெண் சிப்பந்திகள்

இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற திருப்பதி மலைக்கோவிலில் நேர்த்திக்காக மொட்டையடிக்கும் பெண் பக்தர்களுக்கு மொட்டையடிப்பதற்குப் பெண் சிப்பந்திகளை நியமிக்கவுள்ளதாக திருப்பதி தேவஸ்தானத் தலைவர் அறிவித்துள்ளார். தமது நேர்த்திக்கடனை நிறைவு செய்வதற்காக பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திருப்பதிக் கோவிலில் மொட்டையடிப்பது குறிப்பிடத் தக்கது.


## ஒரிசாவில் காங்.தலைவரின் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு

ஒரிசாவில் மாவட்ட காங்கிரஸ் தலைவரின் வீட்டை நேற்று முன் தினம் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் குண்டு வைத்துத் தகர்த்தனர். இதில் வீடு பலத்த சேதமடைந்தது. சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் அதிகாலை 2.20 மணியளவில் கிராமத்திற்குள் நுழைந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள், சத்திய நாராயணா வீட்டின் கதவுகளைத் தட்டினர். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அனைவரையும் வெளியே வரும்படி கேட்டுக்கொண்டனர். பின்னர் சத்திய நாராயணாவையும், அவரது குடும்பத்தினரையும் தூணில் கட்டிவைத்தனர். குண்டுகளை வீட்டின் மீது எறிந்து வெடிக்கச் செய்தனர். இதில் வீடு பலத்த சேதமடைந்தது. பின்னர் அவருக்குச் சொந்தமான அரிசி ஆலை, கடைகள் மீதும் வெடிகுண்டுகளை வீசினர். உளவுயந்திரங்களுக்கும் தீ வைத்தனர். இந்தக் குண்டுவெடிப்புகளால் அருகில் உள்ள வீடுகளில் வெடிப்பு ஏற்பட்டது. தாக்குதலை நடத்தி விட்டுச் செல்லும் போது விலை உயர்ந்த நகைகளையும், பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

## இல.இந் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்பட்டால் 30 லட்சம் தமிழர்களின் வாழ்வைப் பாதிக்கும்

### வை.கோபாலசாமி



இந்தியா இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுவதன் மூலம் இலங்கையில் 30 லட்சம் தமிழர்கள் வாழ்வு பாதிக்கப்படுமென மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகப் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித் திருக்கிறார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதன் மூலம் இலங்கையில் உள்ள 30 லட்சம் தமிழர்களின் வாழ்வு பாதிக்கப்படும் என்று டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங் காங்கிரஸ் தலைவி சோனியாவிடம் கூறினேன். தற்போது ஒப்பந்தம் ஏற்படவில்லை. இதனால் மிகப்பெரிய ஆபத்து நீங்கியது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் தெற்கேயும் ஒரு காஷ்மீர் உருவாகி இருக்கும் அதை தடுத்து நிறுத்திய பெருமை நமக்கு உண்டு. அரசியல்கட்சி எல்லையைக் கடந்து மக்கள் பணி ஆற்றுவதில் ம.திமு.க. பெருமைப்படுகிறது.

கர்நாடகாவில் 70 லட்சம் தமிழர்கள் பிரச்சினை குறித்து அம்மாநில முதல்வரிடம் விரிவாகப் பேசி உள்ளேன். கேரள மாநில முதல்வருடன் தமிழகத்திற்குத் தேவையான தண்ணீர் தருவது குறித்து பேசியுள்ளேன். எனவே ம.தி.மு.க.மக்கள் பணியாற்றுவதில் முன்னணியில் நிற்கிறது.

நடைபெற உள்ள சட்ட மன்ற தேர்தலில் தலைவர் கலைஞர் தலைமையில் அரசு அமைய வேண்டும். முதல்வராகக் கலைஞர் பதவி ஏற்கவேண்டும் அதுதான் தமிழகத்தின் எதிர்காலம் நன்றாக அமைய வழி வகுக்கும். எனவே எதிர்க்கட்சிகள் ஓரணியில் சேர வேண்டும் எனவும் கூறினார்.

## அரியானாவில் விபத்து இரு அமைச்சர்கள் பலி

அரியானா மாநில அமைச்சர்கள் இருவர் உலங்குவானூர்தி விபத்தில் பலியாகியுள்ளனர்.

கடந்த புதன் மதியம் சண்டிகரியிலிருந்து புறப்பட்ட உலங்குவானூர்தி இடையில் இயந்திரம் இயங்க மறுத்ததால் விபத்து சம்பவித்ததாகத் தெரியவருகிறது. இவ்விபத்தில் உலங்குவானூர்தியில் பயணித்த இரு அமைச்சர்களும் அவ்விடத்திலேயே கொல்லப்பட விமானி உட்பட மூவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## பீகாரில் ஐக்கிய ஜனதாதளம் ஆட்சியமைக்க முயற்சி

(பீகார்)

சமீபத்தில் நடந்த பீகார் சட்டமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை அம்மாநிலத்தில் ஆட்சி அமைக்க 122 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை ராஷ்டிரிய ஜனதாதளம் கூட்டணிக்கும் பா.ஜ.ஐக்கிய ஜனதாதளக் கூட்டணிக்கும், தலா 94 சட்டமன்ற உறுப்பினாகளின் ஆதரவுள்ளது. மத்திய அமைச்சர் ராம்பிலாஸ் பஸ்வானின் லோக்ஜன சக்தி கட்சியில் 29 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் எனவே ஆட்சி அமைக்க பஸ்வானின் ஆதரவு தேவை ஆனால் ராஷ்டிரிய ஜனதாதளத் திற்கோ. பா.ஜ.வுக்கோ ஒரு போதும்ஆதரவு அளிக்க முடியாது என்று பஸ்வான் கூறிவிட்டார். இதையடுத்து அம்மாநிலத்தில் சனாதிபதி ஆட்சி அமுல் படுத்தப்பட்டு உள்ளது. இந்நிலையில் பஸ்வான் ஆதரவுடன் பீகாரில் ஆட்சி அமைக்க ஐக்கிய ஜனதா தளக்கட்சி தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.



இந்தியா–மொரிசியஸ் இடையே கடந்த வியாழன் நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. பிரதமர் மன்மோகன்சிங், மொரிசியஸ் பிரதமர் பால்ரெய்மாண்ட் ஆகியோர் முன்னிலையில் இந்தியத் தூதர் பி.எஸ்.ஷேயரும், மொரிசியஸ் வெளியுறவு மந்திரி விஜய் மாகானும் கையெழுத்திட்டனர்.

## விஷம் உண்டு குரங்குகள் பலி

தமிழகம் புதுக்கேட்டைப் பகுதியில் நூறிற்கு மேற்பட்ட குரங்குகள் விஷம் வைத்து கொல்லப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை வீதியோரமாக இறந்த நிலையில் கிடந்த குரங்குகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவை விஷம் உட்கொண்டது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஆளுநர் உடனடி விசாரணைக்கு உத்தர விட்டதன் பேரில் பொலிசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விவேகானந்தர் மையம் திறந்தார் மன்மோகன்சிங்

மொரிசியஸ் தீவுக்கு சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங் நான்கு கோடி இந்திய ரூபா செலவில் கட்டிய விவேகானந்தர் மையத்தைத் திறந்து வைத்தார்.

மொரிசியஸ் தீவுக்கு சென் றுள்ள பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் பலநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அந்தத்தீவுக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன் சென்ற இந்தியர்கள் காடாகக் கிடந்த பகுதியை வளம் கொழிக்கச் செய்தனர். அவர்கள் சமாதிகள் "அப்ரா வாசி காட்" என்ற இடத்திலுள்ளது. அங்கு மன்மோகன்சிங் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செய்தார். அங்கு ஒரு நினைவுச் சின்னத்தையும் திறந்தார்.

பிறகு சர்வதேச விவேகானந்தர் மையத்தைத் திறந்து வைத்தார். அந்த மையம் 10 லட்சம் டாலரில் (ரூ.4 கோடி) செலவில் 14 மாதத்தில் லார்சன் அன் டுப்ரோ நிறுவனம் கட்டியது. குறுகிய காலத்தில் கட்டப்பட்டது பெரிய சாதனை என்று பிரதமர் பாராட்டினார். அங்கு மொரிசியசில் உள்ள இந்திய வம்சாவழியினர் மன்மோகன்சிங்குக்கு வரவேற்பு அளித்தனர்.

## சதித்திட்டம் முறியடிப்பு

இந்தியா, பாகிஸ்தான் பகுதிகளுக்கு இடையிலான பேருந்து போக்குவரவுப்பணி எதிர்வரும் ஏழாம் திகதி நடைபெற இருக்கும் நிலையில் அப்பேருந்துப் பணியைத் தடுக்கும் முகமாகத் தீவிரவாதிகள் பேருந்தைத் தகர்க்க எத்தனித்துள்ளதாக இந்திய இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலையடுத்து தேடுதல் மேற்கொண்ட எல்லைப் பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனை நடத்தினர். அப்போது அந்தப் பகுதிகளில் பராமரிப்பின்றிக் கிடந்த நான்கு பழைய மோட்டார் ஊர்திகளைக் கண்டுபிடித்தனர். அவற்றைத் திறந்து ஆராய்ந்தபோது, தலா 24 கிலோகிராம் ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்துஇருந்தது தெரியவந்தது. மொத்தம் 117 கிலோகிராம் வெடிமருந்து பதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து விசாரணையில் ஸ்ரீநகர்-முசபராபாத் பேருந்து வரும்போது அதன் மீது இந்த வெடிகுண்டு ஊர்தியை மோதிப் பேருந்தைத் தகர்க்கத் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தமை தெரிய வந்தது. இதையடுத்து வெடிமருந்து ஊர்திகளைக் கைப்பற்றிய பாதுகாப்புப் படையினர் இதனால் மிகப்பெரிய சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது எனத் தெரிவித்தனர்.

## சிங்கம் புலிகளுக்கு கண் சிகிச்சை

ஜெய்ப்பூர் மிருகக் காட்சிச் சாலையில் கண்பார்வை குறைந்து வந்த ஒரு சிங்கத்துக்கும், இரண்டு புலிகளுக்கும் சென்னை கால்நடை பல்கலைக்கழக மருத்துவர்கள் சென்று சிகிச்சை அளித்தனர்.

மனிதர்களுக்கு கண்களில் 'புரை' ஏற்பட்டால் அது அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்படுகிறது. இதேபோல் மிருகங்களுக்கும் சத்திரசிகிச்சை செய்யப்படுகிறது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் மிருகக் காட்சி சாலையில் உள்ள ராஜா என்ற சிங்கத்திற்கு கண்களில் 'புரை' வளர்ந்தது. இதனால் இரு கண்களிலும் பார்வைக் குறைவு ஏற்பட்டது.

இதேபோல் அங்குள்ள ஒரு புலிக்கு கிளாகோமா என்கிற பார்வை இழப்பு நோய் வந்திருந்தது. மற்றொரு புலியின் கண்ணில் புண் ஏற்பட்டு இருந்தது.

எனவே அந்த மூன்று மிருகங்களுக்கும் சிகிச்சை அளிக்க சென்னை வேப்பேரியில் உள்ள தமிழ் நாடு கால் நடை அறிவியல் மற்றும் மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு கோரிக்கை விடுத்தனர்.

சென்னை கால்நடை அறிவியல் மருத்துவ பல்கலைக்கழகத் துணை வேந்தர் பலராமன், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் தங்கராஜ் ஆகியோர் அந்த மிருகங்களுக்கு சிகிச்சை அளித்துக் குணமாக்கினர்.


## கொச்சி ஒரு நாள் போட்டி

# பாக்.கை வீழ்த்தியது இந்தியா



இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று கொச்சியில் நடைபெற்ற முதலாவது போட்டியில் சச்சின் டெண்டுல் கரின் சிறப்பான பந்து வீச்சினாலும், செவாக், ராவிட் ஆகியோர் பெற்ற சதத்தினாலும் ஆறு போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா தனது முதலாவது வெற்றியைப் பெற்றுள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அணித் தலைவர் கங்குலி தனது அணி துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா இரண்டாவது ஓவரில் ஒன்பது ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அடுத்தடுத்து சச்சின், கங்குலி ஆகியோரின் விக்கெட்டுக்களை இழந்தது. பின்னர் மூன்றாவது இணையாக ஆட்டத்தைத் தொடங்கிய செவாக் (108), ராவிட் (103) ஆகியோரின் அபாரத் துடுப்பாட்டத்தினால் 50 ஓவர்கள் முடிவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 282 என்ற ஓட்ட வெற்றியிலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் 45.2 ஓவரில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 194 ஓட்டங்களை மட்டுமே





பெற்றது. அவ்வணியில் அணித் தலைவர் இன்சமாம் உல்ஹக் 37 ஓட்டங்களையும், மொகமட் ஹபிஸ் 48 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சச்சின் டெண்டுல்கர் ஐந்து விக்கெட்டுக்களையும், பாலாஜி, சஹீர்கான் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், நெஹ்ரா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக 94 பந்துகளில் மூன்று சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 108 ஓட்டங்களைப் பெற்ற விரேந்தர் செவாக் அறிவிக்கப்பட்டார்.

இரண்டாவது போட்டி வரும் செவ்வாயன்று விசாகபட்டினத்தில் நடைபெறவுள்ளது.

# ஒரு டெஸ்ட் தடையிலிருந்து இன்சமாம் தப்ப முடியாது



பாக்.அணித்தலைவர் இன்சமாம் ஒரு டெஸ்ட் தடையிலிருந்து தப்ப முடியாது எனத் தெரிகிறது. இவருக்காக அப்பீல் செய்ய வாய்ப்பு இல்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்து விட்டது.

இந்தியாவுக்கு எதிரான பெங்களூர் டெஸ்டில் இன்சமாம் அதிகப்படியாக அப்பீல் செய்தார். இதற்காக ஒரு டெஸ்ட் தடை, சம்பளத்தில் இருந்து 30 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து பாகிஸ்தான் சபை சார்பில் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐ.சி.சி) அப்பீல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறி கைவிரித்துவிட்டார் பாகிஸ்தான் சபை இயக் குநர் அபாஸ் ஜெய்தி அவர் கூறுகையில்,

"இன்சமாம் விசயத்தில் ஐ.சி.சி விதிமுறைகள் மிகவும் தெளிவாக உள்ளன. விதிமுறைப்படி தடையை எதிர்த்து அப்பீல் செய்ய இயலாது தற்போதைய சூழலில், வரும் ஜூனில் நடக்க உள்ள மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் இன்சமாம் பங்கேற்க மாட்டார் என்றார்.




## லாறா உட்பட முன்னணி வீரர்க்கு கொலை மிரட்டல்



விளம்பர ஒப்பந்த சர்ச்சையில் லாறா உட்பட முன்னணி வீரர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட்டில் விளம்பர சர்ச்சை நீடிக்கிறது. கிரிக்கெட் சபையின் அனுசரணையாளராக டிஜிசெல் நிறுவனம் உள்ளது. இதன் போட்டி நிறுவனமான கேபிள் அண்ட் வயர்லெசுடன் லாறா உட்பட ஏழு வீரர்கள் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இதுதான் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்தது. தனிப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்யும் படி சபை வலியுறுத்தியது. இதை ஏற்க மறுத்த லாறா, கிறிஸ் கெய்ல், சர்வான், எட்வர்ட்ஸ், வெய்னி பிரவோ, வெய்னி ஸ்மித் மற்றும் ரவி ராம்பால் ஆகிய வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டனர். தென்னாபிரிக்க தொடருக்கு சந்தர்போல் தலைமையில் புதிய அணி அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே நீக்கப்பட்ட வீரர்களுக்கு எதிராக பல்வேறு தரப்பிலும் இருந்து மிரட்டல் வருவதாக மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தலைவர் தினாநாத்ராம் நரைன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இவர் கூறுகையில்; மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகள் எல்லாம் கொடூரமானதாக உள்ளது தன்னிச்சையாக வீரர்களை நீக்குகின்றனர். விளம்பரதாரர்களுக்காக கிரிக்கெட்டை தியாகம் செய்யத் தயாராகி விட்டனர். லாரா உட்பட ஏழு வீரர்களுக்கு கிரிக்கெட் சபை, விளம்பரதாரர்கள், அரசியல்வாதிகள் என பல்வேறு தரப்பிலும் இருந்து அன்றாடம் மிரட்டல் விடுக்கப்படுகிறது. சிலர் கிரிக்கெட்டில் ஈடுபடக்கூடாது என்கின்றனர். சிலர் கொலை செய்யப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர் என்றார்.

இந்தப்புகாரை மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபை மறுத்துள்ளது. இது நேர்மையற்ற குற்றச்சாட்டு என்று கூறியுள்ளது.

## முஷாரப் பார்வையிடும் டில்லி போட்டி ரத்தாகலாம்?

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பார்க்க இருந்த டில்லி ஒரு நாள் போட்டி ரத்துச் செய்யப்படுகிறது. பாதுகாப்புக் கெடுபிடிகளால் போட்டியை நடத்த இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக டில்லி கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது.இப்போட்டி வேறு இடத்துக்கு மாற்றப்படும் எனக் கூறப்படுகிறது.


இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒரு நாள் தொடரின் கடைசி மற்றும் ஆறாவது போட்டி வரும் 17இல் டில்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் நடக்க இருந்தது. இப்போட்டியைக் காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் உட்பட பல வி.ஐ.பி.க்கள் வரவிருந்தனர். ஆனால், மைதானம் தயாராகாததால் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் போட்டியை திட்டமிட்டபடி நடத்த இயலுமா என்ற சந்தேகம் எழுந்தது. தவிர அதிபர் முஷாரப் வருவதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதிலும் சிக்கல் ஏற்பட்டது.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் மே.தீவு 543 ஓட்டங்கள் குவிப்பு




மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையில் மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா விக்கெட் இழப்பின்றி இரண்டு ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக தனது முதல் இனிங்சில் மேற்கிந்தியத் தீவு அணி புதிய தலைவர் சந்தர் போலினதும் ஹின்ஸினதும் இரட்டைச் சதங்களின் உதவியோடு 543 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. ஆரம்பத்தில் 24 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து பரிதாபமான நிலையிலிருந்த அவ்வணி சந்தர்போல் ஹின்ஸ் ஆகியோரின் சிறந்த



துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலையைப் பெறறது.இதில் ஹினஸ் 213 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார். சந்தர் போல் 203 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார். தென்னாபிரிக்கா சார்பில் கலிஸ், லாங் வெல்ட் தலா ஒரு விக்கெட்டையும் நெல் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.



சரியான சதம்...ஜோர்ஜ்டவுனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் மேற்கிந்தியத்தீவு அணியின் சந்தர்போல் சதம் அடித்தார். இதில் என்ன விஷேடம் என்கிறீர்களா? மேற் கிந்தியத்தீவு அணியில் கிளைவ் லொயிடுக்கு பிறகு அணித்தலைவர் விளையாடியமுதல் டெஸ்டில் சதத்தை கடந்த வீரராகிறார் சந்தர்போல்

# மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் இங்கிலாந்தைத் தோற்கடித்தது நியூசிலாந்து



தென்னாபிரிக்காவில் நடைபெறும் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட்போட்டித் தொடரில் நியூசிலாந்து அணி இங்கிலாந்தை ஐந்து விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

எனினும் ஒரு போனஸ் புள்ளியினால் அவ்வணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

பல முக்கிய வீராங்கனைகள் காயம் காரணமாக ஓய்வில் இருந்ததால் இங்கிலாந்துக்கு இந்தத் தோல்வி ஏற்பட்டது. இப்போட்டியில் முதலில் ஆடிய இங்கிலாந்து 50 ஓவர்களில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 176 ஓட்டங்களைப்



பெற்றது. பதிலுக்கு ஆடிய நியூசிலாந்து ஐந்து விக்கெட்டுக்களையிழந்து 180 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அவ்வணியின் கெப்டரிப்பன், சாரா மக்கிளசன் முறையே 43,35 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தனர். நியூசிலாந்து கடந்த 31 ஆம் திகதி நடைபெற்ற இந்தியாவுடனான போட்டியிலும் ஏழு விக்கெட்டுக்களால் வென்றமை குறிப்பிடத்தக்கது.


இந்தியா நேற்று முன்தினம் மேற்கிந்தியத் தீவுகளை ஒன்பது விக்கெட்டுக்களால் வென்றது. அவுஸ்திரேலியா அயர்லாந்தையும் தென்னாபிரிக்கா சிறிலங்கா அணியையும் வென்றுள்ளன.

# உலகக் கோப்பைக் கிரிக்கெட்; ஒரே குழுவில் இந்தியா, இலங்கை

உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் ஒரே பிரிவில் இந்தியா-இலங்கை அணிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அடுத்த உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி வரும் 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவில் நடக்கவுள்ளது. இப்போட்டியில் மொத்தம் 16 அணிகள் கலந்து கொள்கின்றன. சர்வதேச ஒரு நாள் தரவரிசைப்படி முதல் 11 அணிகளும் பட்டியலிடப்படவுள்ளன. இதன் பின்னர் எஞ்சிய ஐந்து அணிகள் ஐ.சி.சி. கிண்ண போட்டியின் மூலம் தேர்வு செய்யப்படவுள்ளன. இந்த 16 அணிகளும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் மோதல்கள் நடக்கவிருக்கின்றன.

முதல் கட்ட மோதல்கள் நடக்கவுள்ள பிரிவுக்கான அணிகள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்பட்டன. இதன்படி சர்வதேச தரவரிசையில் எட்டாவது இடத்தில் இருக்கும் இந்தியா, இலங்கைமற்றும்பங்களாதேஷ் ஆகிய அணிகள் ஒரே பிரிவில் இடம்பிடித்துள்ளன. தரவரிசையில் முதலிடத்தில் உள்ள அவுஸ்திரேலியா, ஐந்தாவது இடத்தில் உள்ள தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் முதல் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. நியூசிலாந்து, இங்கிலாந்து, கென்யா ஆகிய அணிகள் மூன்றாவது பிரிவிலும், பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவு, சிம்பாப்வே ஆகிய அணிகள் கடைசிப் பிரிவிலும் சேர்க்கப்பட்டுள்ளன.



## சிந்தனைக்கு

போரும் - கல்வியும் இணைந்த வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எமக்கில்லாவிடினும்...!

பொலிஸ் விசாரணையின் போது 17 சந்தேக நபர்கள் கொலை செய்யப்பட்டது. சட்ட விரோதமான செயல் என மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையின்போது சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ ஒப்புக் கொண்டதோடு. இது தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைக்குப் பூரண ஆதரவு வழங்குவேன் எனவும் உறுதியளித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ மனித உரிமை ஆணைக்குழுவிற்கு வழங்க முன்வந்துள்ள ஒத்துழைப்பு பாராட்டப்படத்தக்கதொன்றே. ஏனெனில் பொலிஸ் நிலையப் படுகொலைகள் குறித்து பொலிஸ்மா அதிபர் ஒப்புக்கொள்வதும் விசாரணைக்கு ஒத்துழைப்புத் தருவதாக அறிவிப்புச் செய்வதும் சிறிலங்காவின் வரலாற்றில் முன்னேற்ற கரமானதொன்றேயாகும்.

ஆனால் நம் மனத்தில் எழும் கேள்வியானது பொலிஸ்மா அதிபரின் பெரும் தன்மை, மனித உரிமைகள் மீதான அவா என்பன தமிழ்மக்கள் தொடர்பான விடயத்தில் உள்ளதா? என்பதே ஆகும். அதாவது பொலிஸ்மா அதிபர் தமிழர் தாயகப் பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் நடந்த படுகொலைகள், மற்றும் தமிழர் மீதான படுகொலைகள் தொடர்பான விடயத்திலும் இத்தகையதொரு நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவாரா? என்பதே ஆகும்.

ஏனெனில் தற்பொழுது பொலீஸ்மா அதிபர் ஒப்புக்கொண்டுள்ள படுகொலைகள் யாவும் தென்னிலங்கை காவல் நிலையங்களில்- அதிலும் சிங்களவர்களின் படுகொலைகள் தொடர்பானவையாகவே உள்ளன. அதாவது சிங்களவர்களின் படுகொலைகள் தொடர்பான விடயங்களுக்கே ஒத்துழைக்கப் பொலிஸ் மா அதிபர் உடன்பட்டுள்ளார்.

தமிழர் தாயகத்தில் உள்ள சிறிலங்கா பொலிஸ் நிலையங்களிலும் இராணுவ முகாம்களிலும் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை பெருமளவிலானது. ஆனால் இப்படுகொலைகள் தொடர்பாக விசாரணைகள் என்பன நடைபெறுவதென்பது அபூர்வமானது அவ்வாறு இல்லாது எதிர்பாராது இடம்பெற்ற விசாரணைகளில் எதிலும் பொலிஸ் மா அதிபரோ அன்றி சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பினர் எவருமோ படுகொலைகளை ஒப்புக் கொண்டதும் கிடையாது. சிறிலங்கா அரசு அதற்கு ஒத்துழைப்பு வழங்கியதும் கிடையாது.

சில படுகொலைகள் தொடர்பான தகவல்கள் தவிர்க்க முடியாத காரணிகளினால் சிறிலங்கா அரசால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுண்டு. ஆனால் அவ்விசாரணைகளில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பும் சரி, அரசாங்கமும் சரி, ஒரு போதுமே ஒத்துழைப்பு வழங்கியதாக இல்லை.

குறிப்பாக ஆயுதப்படைத்தரப்பு நீதிமன்ற அழைப்பாணைக்கு எப்பொழுதுமே பெரும் மதிப்பு அளித்து நடந்து கொள்வதில்லை. தவிர்க்க முடியாது கலந்து கொண்டாலும். விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்கும் வகையில் நடந்துகொள்வதில்லை. அதாவது தமது கடமை நேரத்திலோ அன்றித் தாம் பொறுப்பாக இருந்த இடத்திலோ நடந்த படுகொலைகளை ஒப்புக் கொண்டது இல்லை.

இதேவேளை சிறிலங்காப் பொலிசாரோ அன்றி ஆயுதப் படைத்தரப்போ நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகையில்- சிறிலங்கா அரசாங்கமும் நீதித்துறையும் ஆயுதப்படையினருக்குக் கை கொடுப்பதில் முனைப்புக் காட்டுவதே நடைமுறையாகும்.

ஒரு புறத்தில் அரசாங்கம் குற்றச்சாட்டிற்கு உள்ளாகிய பொலீசார் மற்றும் ஆயுதப்படைத்தரப்பினருக்கு இடமாற்றங்களை அளித்து அவர்களைப் பாதுகாக்க முற்பட்டது. இதனைத் தவிர படை அதிகாரிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணைக்கு சமுகம் அளிப்பதைத் தவிர்க்கும் வகையில் களமுனைப் பணிகள் உள்ளதென்ற வகையில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தேவையில்லை என விடுப்புக்களை வழங்கியும், பதவி உயர்வுகளை வழங்கியும் படை அதிகாரிகளைப் பாதுகாத்துள்ளது.

அது மட்டுமன்றி படுகொலைகள் தொடர்பாகக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய சிறிலங்காப் படை அதிகாரிகள் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்குத் அவர்களின் சேவைக் காலத்தின் பின்னர் வேறு பல உயர் பதவிகளும் இராஜதந்திர பதவிகளும் வழங்கப்பட்டமையுமே வரலாறாகவுள்ளது. அதாவது படை அதிகாரிகளுக்கு படுகொலைகள் குறித்த எந்தவித அச்சத்தையும் கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கவில்லை.

இந்தவகையில் தமிழ் மக்கள் தொடர்பான படுகொலைகள் விடயத்தில் மனித உரிமைகளையோ, சட்டத்தையோ கருத்திற்கொள்ளாத சிறிலங்காப் பொலிஸ் அதிகாரிகளும் படை அதிகாரிகளும், தற்பொழுது தெற்கிலாயினும் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்தும், மனித உரிமைகள் தொடர்பாகவும் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளமை வரவேற்றகத்தக்கதே. ஏனெனில் இது முன்பை விட ஓரளவேனும் முன்னேற்றகரமானவையே.

# கொலை அச்சுறுத்தல் வருவதாக மனோ கணேசன் முறைப்பாடு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சிறிலங்கா பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

களுபோவிலவில் இடம்பெற்ற கொலை ஒன்றுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமை தொடர்பிலேயே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் சிறையிலுள்ள சந்தேக நபர் பாராளுமன்ற உறுப்பினரை கொலை செய்ய பாதாள உலகக் குழு ஒன்றுக்கு பொறுப்பு அளித்துள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32)

# ஐந்துகோடி ரூபா நஷ்டஈடு கோரி விமல் வீரவன்சவுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவுக்கு எதிராக ஐந்துகோடி நஷ்டஈடுகோரி முன்னாள் ஏற்றுமதி இறக்குமதிச் சபைப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தேசிய தொலைக்காட்சியில் இவருக்கு எதிராக ஜே.வி.பி யின் பிரச்சார செயலாளர் தெரிவித்த கருத்து தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்ட டுள்ளது.

வசந்த பெரேரா ஒரு மோசடிப் பேர் வழி என்றும் கொலைகாரர் என்றும் விமல் வீரவன்ச தனது தொலைக்காட்சி பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு எதிராகவே இந்த நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது.

# பாதுகாப்புக்கு ஆயுதம் வேண்டுமாம் வெலிக்கந்த மக்கள் கோரிக்கை

(வெலிக்கந்த)

வெலிக்கந்த சிங்களக்கிராம வாசிகள் பாதுகாப்புக்காக தமக்கு ஆயுதங்கள் மீண்டும் வழங்கப்படவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். தம்மிடமிருந்து பெறப்பட்ட ஆயுதங்கள் திரும்பவும் தம்மிடம் வழங்கப்படவேண்டுமெனவும் தம்மிடம் இருந்த ஆயுதங்களை பெற்றவர்களால் தமக்குப் பாதுகாப்பு வழங்கப்படவில்லையெனவும் எனவே பெறப்பட்ட ஆயுதங்கள் திரும்பவும் வழங்கப்படவேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர். காட்டு விலங்குகளிடமிருந்தும், தமக்கு எதிரானவர்களிடமிருந்தும் தமது குடும்பங்களை பாதுகாப்பதற்காகவே தாம் இந்த கோரிக்கையை விடுப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பாதாள உலகக் குழுக்களுடன் பொலிசாருக்கு தொடர்பு உண்டு

## —பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்ணான்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதாள உலகக் குழுக்களுடன் பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகள் தொடர்புகளை வைத்துள்ளனர் என சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

கொலை,கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுடனும் பாதாள உலகக் குழுக்களுடனும் பொலிசாருக்கு தொடர்புண்டு.

உயர் பொலிஸ் அதிகாரிகள், பிரதிப்பொலிஸ்அதிகாரிகள், பிரதம பொலிஸ் பரிசோதகர்கள், பிரதிப் பொலிஸ் பரிசோதகர்கள் இக் குழுக்களுடன்தொடர்புகளை வைத்துள்ளனர். இவர்களை நீதியின் முன் நிறுத்தி நிச்சயம் தண்டனை வழங்குவேன்

உயர்நீதி மன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டிய படுகொலை சம்பந்தமாக கைதாகியுள்ள பொட்டு நௌபருக்கு அனுசரணை வழங்கிய பொலிஸ் பரிசோதகர் ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு தற்பொழுது அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொள்ளைகளில் ஈடுபட்ட கடற்படை சிப்பாய் கைது

ஆயுதக் கடத்தல்,மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக சிறிலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் தற்போது நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

விசாரணைகளின் முடிவில் இவருடன் தொடர்புடைய மேலும் பல கொள்ளைச் சம்பவங்கள் தெரியவரலாமென பொலிசார் தெரிவித்துள்ளனர். சிறைச்சாலையில் இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இவர் பயன்படுத்திய தலையணையை பொலிசார். பிரித்துப் பார்த்தபோது தலையணைக்குள் இருந்து ஹெரோயின் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பு ஜயா இறங்குதுறையை தனியார்மயமாக்கும் யோசனையில்லை

## —துறைமுக விமானசேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்திலுள்ள ஜயா இறங்குதுறையை தனியார் மயமாக்கும் எந்தவொரு யோசனையும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவில்லையென துறைமுக விமானசேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கூட்டணி அரசு எதிர் வரும் நாட்களில் இவ்வாறான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜயா இறங்குதுறையை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான யோசனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப் பட்டிருந்தது. துறைமுக அதிகார சபையின் தலைவருடன் நடத்தப் பட்ட கலந்துரையாடலின் போது இந்த விடயம் அம்பலத்திற்கு வந்திருந்தாகவும் அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் இவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஜயா இறங்குதுறை தனியார் மயப்படுத்தப் படமாட்டாதென அவர் மேலும் தெரிவித்தார்.

# அம்பாறையில் கடலில் மாற்றம்; தொழிலுக்குச் செல்ல மீனவர் அச்சம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் வழமைக்கு மாறாக கடற்பரப்பு வித்தியாசமாகத் தென்படுவதாகவும் இதனால் கடற்தொழிலுக்குச் செல்ல தொழிலாளர் தயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் பேரிரைச்சலுடன் பாரிய அலைகள் ஓங்கி அடிப்பது வழமை. ஆனால் கடந்த சில தினங்களாக கடல் அமைதியாக இருப்பதாகவும். கடலின் நீர்ப்பரப்பு முன்னரைவிட உயர்ந்த மட்டத்திலிருப்பதாக இம் மாவட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் மீனவர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதால் ஒருசிலரே கடலில் மீன்பிடிக்கச் செல்கின்றனர். அத்துடன் கடல் நிலை மோசமாகக் காணப்படுவதனால் இப்பகுதியிலுள்ள வள்ளங்களும் படகுகளும் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட கடல் அனர்த்தத்தை தொடர்ந்து கடலில் ஏற்படுகின்ற சிறிய மாற்றமும் மீனவர்களை மனோரீதியாக பாதிக்கச் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## எல்லைப்படை மாவீரர்களின் குழந்தைகள் கௌரவிப்பும் நூல் வெளியீடும்...



பரிசு வழங்கல்...



நூல் வெளியீடு...



கலை நிகழ்வு...

—அரசியலமைப்பை மாற்றியமைக்க—

# வாக்கெடுப்பு நடக்கும் - அநுரா கருத்துக்கணிப்பு நடக்காது -மங்கள

(கொழும்பு)

அரசியலமைப்பை மாற்றிய மைக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுமென அமைச்சர் அநுரா பண்டார நாயக்காவும் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறையை இல்லாது ஒழிக்க கருத் துக்கணிப்பு எதனையும் அரசாங்கம் நடத்தாதென அமைச்சர் மங்கள சமர வீரவும் தெரிவித்துள்ளனர்.

அரசியலமைப்பை மாற்றி யமைக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுமென அமைச்சர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள் ளார்.

அநுராதபுரத்தில் நேற்று நடை பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஓராண்டு பூர்த்தியை கொண்டாடும் முகமாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இது நடை முறைக்கு வரும் இந்த முன்னெடுப புக்கு எதிர்க் கட்சிகளின் ஆதரவும் பெற்றுக் கொள்ளப்படும்.

இதே வேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில பிரதி அமைச்சர்களும் ஜே.வி.பி.யின் உறுப்பினர்களும் தமக்கிடையே வாதப்பிரதி வாதங்களை மேற் கொண்டு வருவது கவலைக்குரி யது எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

இதேவேளை நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறை யினை இல்லாதொழிப்பது தொடர் பில் கருத்து கணிப்பு எதனையும் அரசாங்கம் நடத்தாதென ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். தற்போதைய நிலையில் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட வேண்டியதேவை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகார பரவலாக்கலுக்கு நாட்டு மக்களின் எண்பது வீதமான வர்கள் ஆதரவு வழங்குவார்கள் என சனாதிபதி தெரிவித்த கருத் தானது கடந்த பொதுத்தேர்தல் முடி வுகளை அடிப்படையாகக் கொண் டது என்றும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (32)

# கொக்குவிலில் வீதி விபத்து யுவதி பலி; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பூநாரி என்னுமிடத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் யுவதி ஒருவர் பலியாகியுள்ளார்.

உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த யுவதி தவறி வீழ்ந்த போது எதிரே வந்த ஊர்தி அவர் மீது மோதியதால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த செல்வி என்ற யுவதியே இச் சம்ப வத்தின் போது உயிரிழந்தவரா வார். இச்சம்பவத்தில் உந்துருளி யைச் செலுத்தியவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

## எல்லைப்படை...

கும் நிகழ்வும், தமிழவளின் எல்லைகாக்கும் இல்லங்கள் நூல் வெளியீடு இடம்பெற்றது.

எல்லைப்படை மாவீரர்களின் குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வில் பரிசில்களை தமிழீழ அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கேணல்.துர்க்கா, பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் மற்றும் விடுதலைப்புலிகளின்மகளிர் படையணிகளின் தளபதிக ளும் ஏனைய துறைசார் பொறுப்பாளர்களும் வழங்கிக் கௌரவித்தனர். இந்நிகழ்வில் அனைத்து எல்லைப் படை மாவீரர்களின் குழந்தைகளுக் கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. இதில் எல்லைப்படை மாவீரர்களின் சகோதரர்கள், பெற்றோர்கள் அவர்களின் துணைவியர்கள் மற்றும் பொது மக்கள் ஏனைய துறை சார் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து போராளி தமிழவளின் எல்லை காக்கும் இல்லங் கள் பாகம்-1 வெளியீட்டு நிகழ்வு ஆரம்பமானது.

போராளி மலைமகள் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் வெளியீட்டுரையினை வானதி வெளியீட்டகப் பொறுப்பாளர் உலக மங்கை நிகழ்த்தினார். தொடர்ந்து எல்லை காக்கும் இல்லங்கள் பாகம்-1 நூலினை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா வெளியிட்டுவைக்க முதற் பிரதியினை தமிழீழ வைப்பக மேலாண்மை பணிப்பாளர் பாலச்சந்திரன் பெற்றுக்கொண்டார். அடுத்து 32 எல்லைப் படை மாவீரர் குடும்பங்களுக்கான நூல்களை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் யாழினி வழங்கினார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை கேணல்.யாழினி, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கினர். சிறப்புரையினை விடுதலைப்புலிகள் உறுப்பினர் யோகரட்னம் யோகி தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர் போராளி தமிழவளின் நன்றியுரையினைத் தொடர்ந்து நிருத்திய நிகேதன மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றது. அடுத்து தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வெ. பிரபாகரன் அவர்களினால் அனுப்பி வைக்கப்பபெற்ற சிறப்புப் பரிசில்கள் போராளிகளால் எல்லைப்டை வீரர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## படையினர்...

தாளைச் சந்திக்கும் இடையில் பேருந்தில் இருந்து இறங்கிய அம் மாணவி மீது வீதியூடாக வந்த படையினரின் உந்துருளி மோதியது. இதனால் அந்த மாணவி படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் திரண்ட மக்கள் படையினரின் உந்துருளிக்கு தீயிட்டுள்ளனர். உடனடியாக அங்கு குவிக்கப்பட்ட சிறிலங்கா படையினர் மக்களை அச்சுறுத்தி விட்டு உந்துருளியை எரிந்த நிலையில் மீட்டுச் சென்றனர். மக்கள் மீதான தாக்குதலை நடத்துகிற வகையில் அப்பகுதியில் படையினர் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது. இதே பகுதியில் அண்மையில் சிறிலங்கா படை வாகனம் மோதி ஒருவர் படுகாயம் அடைந்ததை அடுத்து அப்பகுதியில் மக்களுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மாவீரர்களின்...

திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது, தமிழீழ விடுதலைப் போராட் டம் பல இன்னல்களை சந்தித்த வேளைகளில் தமது உயிர்களை ஆகுதியாக்கி விடுதலைப் போராட்டத்தை முன் நகர்த்தி தமிழ் மக்களின் விடிவுக்காக தம் மையே அர்ப்பணித்த மாவீரர் களின் தியாகங்களையும், வரலா றுகளையும், பேணவேண்டிய தேவை எங்கள் எல்லோருக்கும் உள்ளது. அதன் அடிப்படையில் தான் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களும் மாவீரர்களின் அர்ப் பணிப்புக்களையும், தியாகங் களையும் மனதில் நிறுத்தி பணி களை முன்னெடுத்து வருகிறார். அவரின் சிந்தனையின் வெளிப்பா டாகவே தமிழீழ மாவீரர் நடுவப் பணிமனை இன்று கிளிநொச்சி யில் உதயம் பெறுகிறது.

தமிழீழ மாவீரர் பணிமனை யாழ்ப்பாணத்தில் இரு மாடிக் கட்டத்தில் பணியை ஆரம்பித்தது. நாம் வன்னிக்கு வந்தபோது பல வசதியீனங்களுடன் இருந்த போதும் மாவீரர் பணி மனைச் செயற்பாடுகள் மிகுந்த உற்சாகத் துடன் முன்னெடுக்கப் பட்டன.

இன்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படும் இப் பணிமனை மாவீரர்களின் வராலாறுகளை யும், சான்றுகளையும், கணனி மயப்படுத்த வசதிகள் உருவாக் கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவீரர்களின் அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் முழுமையாகப் பாது காக்கப்படும் என்றார்.

இந் நிகழ்வில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் அரசண்ணா ஆகியோரும் உரையாற்றினர்.

இந்நிகழ்வு காலை 10.00 மணிய ளவில் ஆரம்பமாகியது. நிகழ் வின் ஆரம்பத்தில் முதன்மைச் சுடரினை மூன்று மாவீரரின் தாயா ரான திருமதி.தில்லைநாதன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார்.

அன்னை பூபதி அவர்களின் உருவப்படத்திற்கு தமிழீழ அரசி யல்துறையின் நிதிப்பொறுப் பாளர் மா.ஆதவன் சுடரினை ஏற்றி வைத்தார்.

மலர்மாலையினை தமிழீழ அரசி யல் துறையின் நிதிப்பிரிவைச் சேர்ந்த தமிழன்பன் அணிவித் தார்.

மாவீரர் லெப்.சங்கரின் உருவப் படத்திற்கு ஈகச் சுடரினை புலிக ளின் குரல் நிறுவன துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் ஏற்றி வைத்தார்.

மலர் மாலையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் கலைவாணன் அணி வித்தார்.

மாவீரர் 2ஆம்லெப்.மாலதியின் உருவப்படத்திற்கான ஈகச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப் பாளர் பூவிழி ஏற்றிவைத்தார்.

மலர் மாலையினை இரண்டு மாவீரர்களின் சகோதரியான சீதா பத்மினி அணிவித்தார்.

அரங்க நிகழ்வுகள் தமிழீழ மாவீ ரர் பணிமனை துணைப் பொறுப் பாளர் தமிழரசி தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் நன்றியுரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்கள் நிகழ்த்தினார் (ச,சோ)

## இரு...

சனநாயகக் கட்சி காங்கிரஸ் கட் சிப் பிரதிநிதி டானி கே.டாவிஸ் டேனி.எவ்.கன்ரல் ஆகியோரே கிளி நொச்சியிலுள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடே சன் அவர்களைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்தினர். இச்சந் திப்பு ஒரு மணி நேரத்துக்கு மேலாக நீடித்தது. ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி வந்த இவர்கள் பின்னர் முல்லைத் தீவுக்குச் சென்று சுனாமியால் பாதிக் கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டது டன் அங்கு முல்லை.மாவட்ட கரைது றைப் பற்று கோட்டக் கல்வி அதி காரி ம.அன்ரனி ஜெகநாதன், கடற் றொழி லாளர் கூட்டுறவுச் சங்க சமா சத் தலைவர் அ.மரியராசா ஆகியோ ரைச் சந்தித்தனர். (20)

## சுனாமி...

மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் இத்தாலியில் அந்நாட்டு வெளி யுறவுத்துறை அமைச்சக அதிகாரி களைச் சந்தித்து ஆலோசனை நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையி லான அரசியல் விவகாரக்குழுவி னர் கடந்த வியா ழனன்று மாலை ரோம் நகரைச் சென‌றடைந்தனர். வெளியுறவு அமைச்சகத்தின் ஆசியா, ஓசியானா, பசிபிக் மற் றும் அந்தாட்டிக்கா பிராந்தியங் களுக்கான துறையின் இயக்குநர் க்ள்யூடியோ பசிபிக்கோவை அரசி யல் விவகாரக் குழுவினர் சந்தித் துப் பேசினர். ரோமின் வெளியுற வுத்துறை அமைச்சக வளாகத்தில் இச்சந்திப்பு நடை பெற்றது. சுனாமி யால் உயிரிழந்த தமிழ் மக்களுக் காக இத்தாலிய அரசு மற்றும் இத் தாலிய மக்கள் சார்பிலான ஆழ்ந்த இரங்கலை அரசியல் விவகாரக் குழுவினரிடம் இயக்குநர் க்ள்யூ டியோ பசிபிக் தெரிவித்தார். பின்னர் அரசியல் விவகாரக்குழு வின் தலைவரான தமிழ்ச்செல்வனி டம், சுனாமிக்குப் பிந்திய மீளமைப் புப் பணிக்கான பொதுக்கட்டமைப் பின் தற் போதைய சூழல் பற்றி கேள்வி எழுப்பினார். அமைதிப் பேச்சின் தமிழ் மக்களின் நம்பிக்கை நீடித்திருக்க வேண்டும் என்பதிலும் இயக்குநர் க்ள்யூடியோ பசிபிக் அதிக ஆர்வம் எடுத்துக்கொண்ட தையும் அவரது உரையாடல் வெளிப்படுத்தியது. பொதுக்கட்ட மைப்பு கோரிக்கையை தமிழீழ விடுதலைப்புலிகள் முன் வைத்த தற்கான அனுபவ காரணத்தை இந்த உரையாடலின்போது தமிழ்ச் செல்வன் விளக்கினார். சு.ப.தமிழ்ச் செல்வன் கூறியதாவது: சுனாமி தாக்கிய காலத்தில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், மக்கள் அமைப்புகள், உள்ளூர் அரசு அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இணைந்து முழுவீச்சில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்து அணிகளும் மீளமைப்புப் பணி களை மேற்கொண்டன. இந்த ஒருங்கிணைந்த செயற்திட்டம் மீள் பணிகளில் குறிப்பிடத்தக்க வெற் றியை அளித்தது. இதையடுத்தே எமது தலைமை, மீளமைப்புப் பணி களை முழுமையடையச் செய்ய பொதுக்கட்டமைப்பு ஒன் றின் கீழ் இணைந்து பணியாற்ற வருமாறு சிறிலங்கா அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. இதை நோர்வே அனுசரணையாளர் குழு வும் ஏற்றுக்கொண்டது. ஆனால் வருத்தம் அளிக்கிற வகையில் சிறிலங்கா அரசு இது வரையிலும் இப்பொதுக்கட்டமைப்பு குறித்து எவ்வித முடிவும் மேற்கொள்ளவில்லை என்றார். சர்வதேச நாடுகளின் ஆதர வுடன் நோர்வேயின் அனுசரணை யில் மேற்கொள்ளப்பட்டு வருகிற அமைதி முயற்சிகளுக்கான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பங்களிப்பையும் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாத சூழ் நிலை இருப்பதையும் சு.ப.தமிழ்ச் செல்வன் விவரித்தார். போரினால் சிதைவடைந்த தமிழர் தாயகப் பகுதிகளில் எவ்வித மீள் கட்ட மைப்புப் பணிகளும் மேற்கொள் ளப்படவில்லை. இப்பேச்சுவார்த் தைகளால் இடப்பெயர்வுக்குள் ளான தமிழ் மக்கள் மீளவும் அவர் களது வாழ்விடங்களில் குடியமர்த் தப்படவில்லை. உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் பெரும் எண்ணிக் கையில் சிறிலங்கா இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதால் மீளத் திரும்ப இயலாத மக்கள், அகதி முகாம்களில் கடலோரங்களில் வாழ்ந்து வந்தனர். அந்தச் சூழலில் தான் சுனாமியும் ஏற்பட்டது. அத னால் பல்லாயிரக்கணக்கான தமிழர் கள் உயிரிழந்தனர் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிப்ப திலும் அமைதிப் பேச்சுகளில் முன் னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதி லும் இத்தாலி தனது முழு ஒத்து ழைப்பையும் நோர்வே அனுசர ணையாளர்களுக்கு அளிக்கும் என்றும் இச்சந்திப்பில் உறுதியளிக் கப்பட்டது. சுனாமி மீளமைப்புப் பணிகளில் இத்தாலிய மக்களின் தன்னெழுச்சியான பங்களிப்பிற்கு நன்றியையும் தமிழ் மக்கள் சார்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பின் போது தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது